ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] குரோதன ஆண்டு வைகாசித்திங்கள் 10-6-85 [இதழ்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிவிழா

8—7—1985



தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியும்,

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

எல்லாம் உனது செயலென்
றறிந்தும் எனதுளத்தில்
பொல்லாத சங்கற்ப மேன்வரு
மோபுர மூன்றெரித்த
வல்லாய் கமலையுள் ஞானப்ர
காச மகிப, விது
சொல்லாய்; கரண மயக்கமன்றோ
வென் தொழிலல்லவே.

— ஞானப்பிரகாசமாலை 9

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி. அருணை வடிவேல் முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 ‖ 10-6-85 ‖ இதழ் 7

உட்பொருள்

எண்		பக்கம்
1	தவத்திரு குன்றக்குடி அடிகளாரர் அவர்கள் மணிவிழா ..	565
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ..	570
3	திருமுண்டீச்சரம் தலச் சிறப்புக்கள் .	576
4	தமிழ்நாடு ஹிந்து ஆலயப் பாதுகாப்புக்கமிட்டி	580
5	அபிராமி அந்தாதி ..	581
6	திருவருட்பாத் திரட்டு .	586
7	நால்வர் காலம் ...	590
8	செய்திகள் ...	597
9	கடிதம் ...	607
10	எதிர்காலம் ..	608
11	இதயம்பற்றி	612
12	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம் - 5 ...	613

ஆண்டுச் சந்தா உள்நாடு	ரூ. 12	ஆயுள் சந்தா உள்நாடு	ரூ. 125
ஆண்டுச் சந்தா சிலோன்	25	ஆயுள் சந்தா வெளிநாடு	350
ஆண்டுச் சந்தா வெளிநாடு	35		

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்களிதழ்

மலர் 44 | குரோதன – வைகாசி – 10-6-85 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

தவத்திரு குன்றக்குடி அடிகளாரவர்கள் மணிவிழா

தமிழ்மாமுனிவராக, செந்தமிழ்க் கவிஞராக, பைந்தமிழ்க் காவலராக, தொண்டின் சிகரமாக, சமுதாயச் சீர்திருத்தச் செம்மலாக, சமயமறுமலர்ச்சிப் புரவலராக, சைவ நெறிச் சான்றோராக, சிவம்பெருக்கும் சீலராக, பேச்சுத்திறத்தால் வையத்தைப் பேணி வளர்ப்பவராக, எல்லாவற்றுக்கும் மேலாக நம் தமிழ்க் குரவராக, நானிலம் போற்றத் திகழ்ந்துவருபவர்கள் தமிழ்மக்களின் போற்றுதலுக்கு உரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆவார்கள்.

இளமைப்பருவம் :

தவத்திரு அடிகளார் அவர்களை ஈன்று புறந்தந்த பெருமை தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்த நடுத்திட்டு என்ற சிற்றூரைச்சேரும். அடிகளார் அவர்களைச் சான்றோராக்கிய

பெருமை தருமையாதீனத்தைச் சாரும். சைவசித்தாந்தச் சண்ட மாருதம் சோமசுந்தர நாயகர் போல இவர்கள், பிறப்பால் வைண வக் குடும்பத்தில் தோன்றினும் சிறப்பால் சைவநெறிக் காவல ராகத் திகழ்பவர்கள். திரு. சீநிவாசப் பிள்ளை அவர்களும், திருமதி சுவர்ணத்தம்மாள் அவர்களும் இவர்களைப் பெற்றுவளர்த்த பெருமைக்குரியவராவர்.

காரைக்குடியை அடுத்துள்ள கடியாப்பட்டி உயர் பள்ளியில் அடிகளார் கல்வி பயின்றார்கள். சொல்லின்செல்வர் ஆர். பி. சேதுப் பிள்ளை அவர்களின் அரவணைப்பில் தமிழுணர்வு பெற்றார்கள். மறைமலை அடிகள், திரு. வி. க, சுத்தானந்த பாரதியார் போன்ற வர்களின் நூல்களைக்கற்பதில் ஆர்வம் மிக்கவர்களாய் விளங்கி னார்கள்.

தருமை ஆதீன அடியவர் :

1943-44 ல் அடிகளார் அவர்கள் தருமையாதீன அலுவலகத் தில் எழுத்தர் பணி ஏற்றார்கள். தருமை ஆதீனம் செய்துவரும் சமயத் தொண்டுகட்கும் தமிழ்த் தொண்டுகட்கும் தம்மை ஆட்படுத் திக் கொள்ளவேண்டுமென்றும், கிறித்தவ மதத் துறவிகளைப் போலவும், இராமகிருஷ்ண மடத்தின் தொண்டர்களைப் போலவும் தாமும் சமயப் பணிகளோடு சமுதாயப்பணிகளையும் செய்யவேண்டு மெனவும் விரும்பினார்கள். 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதம் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களிடம் தம் விழைவைத் தெரிவித்துத் தருமையாதீனத் தொண்டராய்த் துறவு மேற் கொண்டார்கள். ஆதீனத் திருக்கூட்டத்தில் அடியவராக விளங்கிக்கொண்டே ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் தமிழ்ப்புலவர் வகுப்பில் சேர்ந்து சிறப்புறப் பயின்று வந்தார்கள். பல்கலைக் கல்லூரியில் பயின்றுவரும் காலத்தில் இலக்கிய இலக்கணப்பயிற்சி யோடு மாணவர் இலக்கிய மன்றத்தைச் சிறப்புற நடத்தித் தம் சொல்வன்மையையும் பெருக்கிக் கொண்டார்கள். ஆதீனத் திரு மடத்தில் ஐந்தாண்டுக்காலம் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங் கள், புராண இதிகாசங்கள் முதலியவற்றை முறையாகக் கற்றுத் தேர்ந்தார்கள்.

குன்றக்குடித் திருமடத்தின் அழைப்பு:

குன்றக்குடியில் விளங்கும் திருவண்ணாமலை ஆதீனம் திருக் கயிலாய பரம்பரையில் மெய்கண்டசந்தானத்தைச் சேர்ந்த சமய நிறுவனமாகும். இன்றைக்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட

இவ்வாதீனத்தின் 44 ஆவது மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி ஆறுமுக தேசிக சுவாமிகள் குன்றக்குடி திருமடத்திற்குத் தமக்குப் பின் தக்க வாரிசு ஒருவரை நியமிக்க விரும்பினார்கள். தருமையாதீனத்தில் அடியவராக விளங்கும் நம் அடிகளார் அவர்களை தமக்குப் பின் குன்றக்குடித் திருமடத்தின் தலைவராக நியமிக்க விழைந்தார்கள். தக்கவர் மூலம் தருமையா தீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களுக்குத் தம் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அடிகளார் அவர்களைப் குன்றக்குடி திருமடத்திற்கு அனுப்ப திருவுளம் இல்லை யாயினும், குன்றக்குடி திருமடமும் நன்றாக விளங்கவேண்டுமென்ற நன்னோக்கில் அடிகளார் அவர்களைக் குன்றக்குடி ஆதீனத்திற்கு அனுப்பிவைத்தார்கள். குன்றக்குடித் திருமடம் குன்றின்மேல் விளக்குபோலத் திகழ வேண்டுமென்றெண்ணிய குருநாதரின் திருவுள்ளக்கருத்திற்கேற்ப தம் குருநாதரே கண்டு மகிழ ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் என்ற தீட்சாநாமத்துடன் அவ்வாதீனத்தின் ஞானபீடத்தில்அமர்ந்து அன்றுமுதல் அருளாட்சி புரிந்து வருகிறார்கள்.

நற்பணிகள்:

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமாக அருளாட்சி யேற்ற பின் இவர்கள் நாட்டுமக்களுக்குச் செய்துவரும் நற்பணிகள் பலவாகும். குன்றக்குடி, பிரான்மலை முதலிய ஆதீனத் திருக் கோயில்களைத் திருப்பணிகள் செய்வித்து மகாகும்பாபிஷேகங்கள் நிகழ்த்தியும், பிரான்மலையில் பாரி விழா, திருப்புத்தூரில் திருமுறை விழா, தமிழ்ச்சங்கம் ஆகியனவற்றை ஆண்டுதோறும் சிறப்புற நடத்தியும் வருகிறார்கள். உலகு தழுவிய நிலையில் கடல் கடந்த நாடுகளிலும் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சமய ஈடுபாடுடைய அறிஞர்கள் அன்பர்கள் முதலியவர்களை ஒருங்கிணைத்து அருள் நெறித் திருக்கூட்டம் அமைத்துச் சிறப்புற சமயப்பணிகள் செய்விக் கும் அருந்தொண்டுகளை ஆற்றி வருகின்றார்கள்.

குன்றக்குடியில் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளி முதலிய கல்வி நிலையங்கள் அமைத்தும் பாபநாசத்தில் திருவள்ளுவர் கலைக் கல்லூரி நடத்தியும் கல்விப்பணி புரிகின்றார்கள்.

மத்திய மாநில உதவியுடன் குன்றக்குடியையும் சுற்றுப்புற ஊர்களையும் இணைத்துச் சிறுதொழில் நகரமாக அவற்றை மாற்றி யமைத்து வளங்கண்டுள்ளார்கள்.

இந்தியநாடு முழுதும் இவர்கள் செல்லாத இடங்கள் இல்லை எனலாம். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர். இந்தோனேசியா, ரஷ்யா, ஹாங்காங், ஜப்பான், சீனு முதலிய நாடுகளுக்குச் சென்று சிவநெறி பரப்பியபெருமை இவர்கட்கே உரிய தனிச் சிறப்பாகும்.

தமிழக அரசு இவர்களின் சமயப்பணி, சமூகப்பணி, கல்விப் பணி முதலிய நற்பணிகளைப் போற்றித் தமிழக அரசு இவர்களை மேல்சபைஉறுப்பினராக்கிப்பெருமைகொண்டது. தமிழகத்திருமடங்களை ஒருங்கிணைக்கும் தெய்வீகப் பேரவையின் தலைவராய் விளங்கி நல்லபல திட்டங்களைச்செயற்படுத்திய பெருமை இவர்களைச்சாரும்.

அடிகளார் அவர்கள் சமயம் சார்ந்த அன்பர்களோடு மட்டு மல்லாமல் ஏனையவர்களோடும் கலந்து பழகிஉறவுகொள்ளும் உயர் வுடையவர்கள். திராவிடர் கழகத்தலைவர் ஈ. வே. இராமசாமிப் பெரியார் இவர்கள்பால் கொண்டிருந்த அன்பையும் மரியாதையும் அனைவரும் அறிவர். இஸ்லாம் ,கிறித்தவ சமயத்தலைவர்கள் பலர் அடிகளாரிடம் பெருமதிப்புக்கொண்டிருக்கின்றனர். சமயவழிபாடு களில் மக்களிடம் பூசல்கள்ஏற்படும் இடங்களில் அடிகளார் அவர்கள் தாமேசென்று அவர்களின் மனக்கோட்டங்களைத்தவிர்த்து வருவதை நாம் கண்டுள்ளோம்.

மணிவிழா :

தமிழ் மக்களுக்கு அல்லும் பகலும் அயராது பணிபுரியும் தவத் திரு அடிகளார் அவர்கள் அறுபதாண்டுகள் நிறைவு பெற்று மணி விழாக் காண்கிருர்கள். தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் அன்பர்கள் இவர்களின் மணிவிழாவைச் சிறப்புறக் கொண்டாடித் தங்கள் நன்றியைத் தெரிவிக்க முன் வந்துள்ளார்கள். தமிழகத்தின் திருமடங்களின் தலைவர்கள், அமைச்சர்கள், அறிஞர்கள், அன்பர் கள் முதலியோர் மணிவிழாக் குழுவின் புரவலர்களாக விளங்க, அருள்மிகு கோவிந்தானந்தா சுவாமிகள் முன்னின்றுஇவ்விழாவைச் சீர் பெற நிகழ்த்தவுள்ளார்கள். அடிகளார் மணிவிழா நினைவாகச் சமயம் கல்வி சமூகமேம்பாடுகள் ஆகியவற்றுக்குப் பல அறக் கட்டளை நிலைநிதிகள் அமைக்க மணிவிழாக்குழுவினர் திட்டமிட்டுள் ளது வரவேற்கத்தக்கது.

தமிழகத்தில் அடிகளாரிடம் அன்பும் பக்தியும் கொண்டுள்ள செல்வர்கள், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், அன்பர்கள் பலரும்இம்மணிவிழா ஏற்றமுற நிகழ உதவக்கடமைப்பட்டுள்ளனர்.

தமிழகமக்கள் தவத்திரு அடிகளார் அவர்கள் அருந்தொண்டுகளுக்கு உதவிடும் வாய்ப்புத் தங்கட்குக் கிடைத்துள்ளது என்ற பெருநோக்கோடு மணிவிழா அறக்கட்டளை நிதிகட்குப் பெருநிதி வழங்கி மகிழ்வார்களாக.

தருமையாதீனம்:

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமை தந்த தவச்செல்வர் அவர்களின் மணிவிழா அறக்கட்டளை நிதிக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கியருளியதோடு மணிவிழா நிகழ்ச்சிக்குக் குன்றக்குடிக்கு எழுந்தருளி, தருமையாதீனத்திருமுறை வெளியீடுகள் அடங்கிய திருமுறைத்திருக்கோயில் பெட்டகம் வழங்கத் திருவுளம்பற்றியுள்ளார்கள்.

பிரார்த்திப்போம்:

செந்தமிழ் மொழிவளம்பெறவும், சிவநெறி தழைத்தோங்கவும் தவத்திரு அடிகளார் அவர்கள் பல்லாண்டுகள் வாழ அன்பர்கள் இறைவனைப் பிரார்த்தனைகள் புரிவோமாக.

பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது இவ்வுகில் மிகமிகப் பெரியதோர் சக்தியாகும். ஏன் எனில் அது மானுடத்திலிருந்து தெய்வீகத்திற்கு வழிகாட்டுகிறது - நம் வாழ்வினைத் தெய்வீகத்தோடு ஐக்கியப் படுத்தவல்லது.

பிரார்த்தனை, பலவீனத்தைச் சக்தியாக மாற்றும். இருளை ஒளியாக மாற்றும். மலைக்கத்தக்க முறையில் இயலாத ஒன்றைக் கடந்திட வழிசெய்யும்.

— சேம்யூல் ஸ்மைல்ஸ்

ஓர் அமைதியான ஒருமுகப்பட்டமனம், ஆக்கப்பணிக்குஊற்றுக் கண்ணாகத் திகழும்.

— மகேஷ்யோகி

இதயத்தின் வாழ்வு அதன் துடிப்பிலிருக்கிறது. ஆனால் அத்துடிப்பின் வாழ்வு அமைதியில் அமைந்து கிடக்கிறது.

— ஜான் பண்டிங்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மணக்குடி அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயில்

திருக்குடமுழுக்குப் பெருவிழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

24—9—1984

" திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே "

யார் மனிதர் ?

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவைப் பிராட்டியார். அந்த மானிடப் பிறவியைப் பெற்றுள்ளோர் அனைவரும் மனிதராய்த் தகுதியுடன் வாழ்கின்றார்களா? என்றால் இல்லை. கை, கால், கண், காது, மூக்குஎன்னும் உடலுறுப்புக்களினால்மட்டும் ஒருவரை மனிதர் என்று கருதிவிடமுடியாது. அம்மனிதருக்கு என்று இருக்கவேண்டிய ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு, அதாவது மன அறிவு இருத்தல் அவசியம். விலங்குகளும் உண்டு, உறங்கி, இனப் பெருக்கம் செய்து, தற்காத்து வாழக்கற்றுள்ளன. இவற்றை மட்டுமே மனிதர்களும் செய்துவருவதால் என்ன பயன்? விலங்குகளிடம் இல்லாத உயர்ந்த ஒழுக்கங்கள், பண்பாடுகள், தயாள உணர்வுகள், சார்ந்தோரைக் காப்பாற்றும் குணங்கள் போன்றவை

இருக்க வேண்டாவா? அவை இல்லாதபொழுது தம்மை மனிதர் என்று மதித்துக்கொள்வது நியாயம் ஆகுமா? இதனை மக்கள் அனைவரும் சிந்தித்துப் பார்த்தல் அவசியம். மனிதர்களாய் வாழ்வோர் எள்ளளவும் பிறருக்குத் தீங்கு நினையாதும் தினையளவேனும் பிறருக்குப் பயன்பட்டும் வாழவேண்டும். இதனை நம்முடைய சமய இலக்கியங்களும் அறநூல்களும் வற்புறுத்திக் கூறுகின்றன. திருமூலர் தம் திருமந்திரத்தில், 'யாவர்க்குமாம் இறைவற்கு ஒருபச்சிலை' என்று இறைவழிபாட்டினை முதற்கண் அருளி, அதனைத் தொடர்ந்து உயிர்கள்மாட்டு நாம் செய்யவேண்டிய அறங்களை அருளுகின்றார்.

" யாவர்க்குமாம் பசுவிற்கு ஒருவாயுறை " என்றும்,

" யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி "

என்றும் அருளினர். இவற்றைச் செய்ய இயலவில்லையேல் பிறரிடம் இனிமையாகப் பேசுவதையாவது செய்யுங்கள் என்னும் கருத்தில்,

" யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே "

என்றருளுகின்றார். அறநூல் ஆசிரியராகிய வள்ளுவரும்,

" அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை "

என்று பகுத்தறிவின்பயனை விளக்கிக்கூறுகின்றார். எனவே விலங்குகளைவிட மனிதர்கள் உயர்ந்தவர்கள் என்பதைவெறும் உடல்தோற்றத்தால்மட்டும் இன்றி உணர்வுகளாலும் செயல் முறைகளாலும் வாழ்ந்து உறுதிப்படுத்தவேண்டும்.

இரக்க உணர்வை ஊட்டும் இறையுணர்வு:

இத்தகைய உயர்ந்த மனிதவாழ்விற்கு இறையுணர்வு இன்றியமையாதது என்பதை முன்னோர்கள் கண்டனர். நமக்குமேலே ஒரு முதல்வன் இருந்து நம்மைக் காக்கிறான் என்னும் உணர்வு இருப்பதனால்தான் நம்மிடம் கடமை உணர்வும், அடக்கவுணர்வும் அயலாரை மதிக்கும் மனோபாவமும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்கின்றன. இறைவனை உண்மையாக வழிபடும் மனித உள்ளத்தில் இறைவனால் காப்பாற்றப்படுகின்ற பிறிதொரு உயிரின்மீதும்அன்பு ஏற்படுவது இயற்கை. இதனால் உண்மை அன்புடையவன் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுகிறான். பிற உயிர்கள் துன்புற்றால்

இவனும் வருந்துகிருன். எனவே இறையுணர்வு உள்ளவனேஎல்லா உயிர்களையும் பேதமற நேசிப்பவன் என்பதை உணர்ந்துகொள்ளலாம். இதனைச் சிவஞானசித்தியார் ஆசிரியர் அருணந்திசிவம்

"ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்"

என்று எதிர்மறையில் அருளிச்செய்தார். எனவே மனிதன் மனிதனுக வாழ இறையுணர்வு வேண்டும். இறையுணர்வுவளரத் திருக்கோயில்கள்வேண்டும் என்பது ஒருதலை. அதனுல்தான் முன்னேர்கள் ஊர்கள்தோறும் திருக்கோயில்களை அமைத்து அன்ருடம் அங்கு மக்கள் சென்றுவழிபட வற்புறுத்தினுர்கள். 'கோயில்இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்னும் பழமொழியும் எழுந்தது. திருக்கோயில் இல்லாத ஊர், வளமில்லாத - சிறப்பில்லாத ஊர் என்னும்பொருளில் 'திருக்கோயில் இல்லாத திருவில்ஊர்' என்றும், அவையெல்லாம் காடுகளே என்றும் அப்பரடிகள் அருளினுர்.

பல உருவவழிபாடு தேவையா ?

இந்த இடத்தில் ஒருகேள்வி எழுவது இயற்கை. திருக்கோயில்கள் ஒரே பரம்பொருளாகிய இறைவனுக்கு மட்டும் இருந்தால் மற்றும்பல தெய்வங்களும், கோயில்களும் வேண்டுமா ? வேண்டும் எனில், இறைவன் ஒருவரா? பலரா ? என்னும் வினக்கள் அன்பர்களின் உள்ளத்தில்எழும். இவற்றிற்கு உண்மையான - உறுதியான பதிலை அனைவரும் தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

இறைவன் ஒருவன்தான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பார் திருமூலர். இறைவன் ஒருவன்தான், வடிவங்கள்தான் பலவாயிருக்கின்றன. நீர் ஒன்றே, இடவேறுபாட்டால், கங்கைநீர், காவிரிநீர், கோதாவிரிநீர் என்று பெயர்பெறுவதுபோல் இறைவனும் உயிர்கள் இருக்கும் இடத்திற்கும் அவற்றின் தகுதிக்கும் ஏற்பப் பல வடிவங்களில் எழுந்தருளி அருள் வழங்குகின்ருன். இதனை மேலும் சில உதாரணங்களால் அறியலாம்.

குடகுமலையில் உண்டாகும் காவிரி அதேபெயரில் அதேஉருவில் அகன்றும், குறுகியும் காவிரிப்பூம்பட்டினம் சென்று கடலில் கலக்கிறது. காவிரியில் பிரியும் கிளை நதிகள் வெண்ணுறு, வெட்டாறு, குடமுருட்டி எனப் பல வடிவங்களும் பெயர்களும் பெற்ருலும், அவற்றில் ஓடிவரும் நீர் காவிரி நீர்தான் என்பதை அனைவரும் ஒப்புவர். அதேபோலத்தான் திருக்கயிலாய மலையில் வீற்றிருந்தருளும் இறைவன் ஒருவன்தான் எனினும்விநாயகர், சுப்பிரமணியர்,

அம்மை, திருமால் முதலிய பல உருவங்களிலும் நிறைந்து நின்று அருள்புரிபவர் ஒரே பரம்பொருளாக இருக்கின்ற இறைவனே என்பதை உணர்தல் வேண்டும்.

இந்தியா என்பது ஒரே தேசம்தான். ஆனால் அதில் பல மாநிலங்களும், ஒவ்வொரு மாநிலத்திலும் பல மாவட்டங்களும், கோட்டங்களும், வட்டங்களும் உள்ளன. இப்படிப் பலவாகப் பிரிந்திருப்பினும் இவற்றினிடையே ஊடுருவி இயக்குவது தனித்தனி ஆட்சியல்ல. எல்லாம் ஜனாதிபதி ஆட்சியிலேயே இயங்குகிறது. இதுபோல்தான்இறையாட்சியும்என்பதைநாம் தெளிதல்வேண்டும்.

விநாயகர் அருள்வரலாறு :

இனி இங்கு எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானின் அருள் வரலாறு பற்றி ஒருசிறிது சிந்திப்போம்.

மாகதன் என்னும் முனிவனுக்கு விபுதை என்னும் ராட்சஸப் பெண்ணிடம் யானை முகத்துடன் பிறந்தவன் கஜமுகாசுரன் என்னும் அசுரன். அவன் பன்னெடுங்காலம் கடுந்தவம் செய்து சிவபெருமானிடம் வரம் பெற்றான். 1008 அண்டங்களையும் 108 யுகங்கள் ஆளும் வரத்தினைப்பெற்றான். மேலும்தனக்குத்தேவர்களாலும், மனிதர்களாலும், விலங்குகளாலும் ஆயுதங்களாலும் அழிவுநேரக்கூடாது என்னும் வரமும் பெற்றான். இறைவன் அவன் கேட்ட வரத்தை அருளினார். பிறருக்குத்தீங்குசெய்தால் நீ அழிந்துவிடுவாய்என்றும் அருளிச் செய்தார். ஆனால் கஜமுகாசுரன் தான் பெற்ற வரங்களை மட்டுமே நினைவில்கொண்டான். பிறருக்குத் தீங்குசெய்தால் அழிவாய் என்ற நிபந்தனையை மறந்து விட்டான். உடனே தேவர்களையும் முனிவர்களையும் மிகவும் கொடுமைப்படுத்தினான். தேவர்கள் இறைவனிடம் முறையிட்டார்கள். இறைவன் அவர்களைக் காப்பாற்ற திருவுளம் கொண்டருளினார். பெருமான்பார்வதிதேவியாருடன் கைலைமலையில் அமைந்திருக்கும் சோலையின் நடுவிலுள்ள சித்திரமண்டபத்திற்குச் சென்று ஆங்குள்ள ஆண்யானை பெண்யானைச் சித்திரங்கள் இரண்டையும் உற்றுப்பார்க்க அவையிரண்டும் இயக்கம்பெற்றுக் கூடின. அவ்வமயம் இறைவன் திருவருளால் யானை முகத்துடன் விநாயகர் ஆங்குத் திருவவதாரம் செய்தருளினார்.

பெருச்சாளி வரலாறு :

அவ்விநாயகப்பெருமானை இறைவன் அனுப்பிக்கஜமுகாசுரனை அடக்கி வர அருளினார். கஜமுகாசுரன் மக்களாலும், விலங்குகளாலும், தேவர்களாலும், ஆயுதங்களாலும் தனக்கு அழிவுவரக்

கூடாது என்று வரம் பெற்றிருந்தான். ஆகையால் அம்மூன்று வடிவமும் சேர்ந்த நிலையில் விநாயகர் சென்று தனதுவலது தந்தத்தால் கஜமுகாசுரனின் ஆணவத்தை அழித்து அவனை ஆட்கொண்டருளினார். போரின்இறுதியில் அவன் பெருச்சாளி வடிவம்கொண்டு போர் செய்ய அதனைத் தன் வாகனமாக ஆக்கிக்கொண்டார். கஜமுகாசுரன் அழியவில்லை. அவன் இன்றும் விநாயகரின் வாகனமாகக்காட்சி கொடுக்கிறான். சூரபதுமன் முருகனின் வாகனமாகிய மயிலாகவும், கோழிக்கொடியாகவும் காட்சிதருவது போல இது அமைந்துள்ளது. இதிலிருந்து நாம் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ளலாம். நாம் யாரையும் ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. அவர்களிடமுள்ள ஆணவத்தை அல்லது மாறுபட்ட போக்கினை, நீக்கி அல்லது மாற்றி வாழ்வளித்துச் சேர்த்துக்கொள்ளுதலே புராணங்கள் கற்றுத் தருகின்ற படிப்பினையாம்.

விநாயகர் தத்துவம் :

விநாயகர் பெரிய உருவத்துடனும் பெரிய வயிற்றுடனும் இருப்பது ஏன் எனில் அவர் அகில உலக உயிர்களையும் காக்கின்றவர் ஆதலின் அத்தகைய உருவில் திகழ்கின்றார். ஒரு குழந்தையைத் தாங்கியுள்ள தாயின் வயிறே பெரிதாக இருத்தலைப் பார்க்கிறோம். உலக உயிர்களனைத்தையும் தன்னுள் அடக்கிக் காக்கின்ற வயிறு பேழைவயிறாக உள்ளது என்பதே தத்துவம். தத்துவங்களில் பொதிந்துள்ள கருத்துக்களை - உண்மைகளைப் புரிந்து கொள்வதே அறிவுடைமையாகும்.

விநாயகர் வழிபாடு :

இத்தகைய காப்புத் தெய்வமாக இலங்கும் விநாயகப் பெருமானை எங்ஙனம் நாம்வழிபடவேண்டும் என்று திருவிளையாடற் புராண ஆசிரியர் அருளுகின்றார். உள்ளமெனும் கோயிலில் ஊக்கம் எனும் முளை நிறுவி, உறுதியான அன்பு எனும் கயிற்றினால் கட்டி, ஆன்மபோதம் எனும் உணவைக் கவளமாக அளிக்கவேண்டும். அதனை உண்டு மகிழ்ந்து கருணை என்னும் வெள்ளமதத்தைப் பொழிவார் சித்திவிநாயகர் என்றருளுகின்றார் பரஞ்சோதியார்.

“ உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர் பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்

கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
கனித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம் ''

என்பது அப்பாடல். இத்தகைய உண்மை அன்போடு அன்பர்கள் தவறாது திருக்கோயிலுக்குச் சென்று ஆங்காங்குள்ள இறைவனை வழிபடுவதை நியமமாகக்கொண்டால், இம்மையிலும்மறுமையிலும் இடையீடில்லா இன்பத்தைப் பெறுவார்கள் என்பது உறுதி.

இங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு சித்திவிநாயகப்பெருமானை இப்பகுதிவாழ் மக்கள் நாளும் வழிபட்டு நலம்பல பெறுவார்களாக! இத்திருக்கோயில் திருப்பணியில் ஈடுபட்டுப் பணிபுரிந்த எல்லோருக்கும் எல்லா நலன்களும் அருள ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

பார்வையாளர் குறிப்பு

அன்பகம், மயிலாடுதுறை

இன்று அன்பகம் காதுகேளாதோர் பள்ளியைப் பார்வையிட்டேன்.

பார்வைசமயம் குழந்தைகளும், பள்ளி நிர்வாகி மற்றும் ஆசிரியர்களும் இருந்தனர். இங்குப்பயிலும் குழந்தைகள் மிக நல்ல முறையில் பயின்று வருகின்றனர். குழந்தைகளுக்கு மருத்துவவசதி மற்றும் தங்கும் விடுதி நல்ல முறையில் ஏற்பாடு செய்துதரப்பட்டுள்ளது.

இங்குக்குழந்தைகள் மிகவும் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். சமூகநலத்துறையின்மூலம் கிடைக்கும் உதவித்தொகை இவர்களுக்கு வழங்கினால் இன்னும் நல்லமுறையில் பள்ளியை நடத்த இயலும். இந்நிறுவனத்தார் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் எனது வாழ்த்துக்கள்.

சா. மேரிசரோஜினி
மாவட்ட சமூகநல அலுவலர், தஞ்சாவூர்.
19—6—85

திருமுண்டீச்சரம் (கிராமம்)
தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தென்னார்காடு மாவட்டத்தில் உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் பண்ணுருட்டிக்கு மேற்கே 20. கீ. மீ. தூரத்தில் பெண்ணையாற்றின் தென்கரையில் இத்தலம் உள்ளது. கிராமம் எனவழங்கப்படுகிறது. நடுநாட்டுத் தேவாரத் தலங்கள் இருபத்திரண்டனுள் இவ்வூர் 19 ஆவது தலமாகும்.

விழுப்புரம் - திருச்சிராப்பள்ளி குறுக்கு இரயில் பாதையில் திருவெண்ணெய் நல்லூர் ரோடு எனவரும் இரயில் நிலயத்திலிருந்து மேற்கே 1. கி. மீ. தூரத்தில் கிராமம் என வழங்கும் இத்தலம் உள்ளது. பண்ணுருட்டியிலிருந்து திருவெண்ணெய் நல்லூர் வழியில் செல்லும் பேருந்துகளில் சென்றால் அருகில் இறங்கலாம்.

பெயர்க்காரணம்:

இத்தலம் திருமுண்டீச்சரம் எனத் தேவாரத் திருப்பதிகத்தில் குறிக்கப்படுகிறது. சிவபெருமான் திருக்கோயில்களில் வாயில் காவலர்களாக விளங்கிய திண்டிமுண்டி என்பாருள் திண்டிவழிபட்ட தலம் திண்டீச்சரம் எனவும், முண்டி வழிபட்டதலம் முண்டீச்சரம் எனவும் பெயர் எய்தின எனத் தலப்புராணம் கூறுகிறது. முடீச்சரம் என்பதே இத்தலத்தின் பழம்பெயராகஇருந்ததுஎன்றும் அப்பெயரே பினனர் திருமுண்டீச்சரம் எனவும் கல்வெட்டுக்களால் அறியலாம். கிராமம் என்னும் பெயரும் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ள பழமையானபெயராகும்.

தலப்பெருமை:

இத்தலம் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத் திருப் பதிகம் ஒன்றைப் பெற்றுள்ளது. சுவாமி இங்குள்ள திருக்குளத்தில் அழகியதாமரை மலர்மீது விளங்கியிருந்து சொக்கலிங்க மகாராஜா என்பவரால் பிரதிட்டை செய்யப் பெற்றவர் எனக் கூறப்படுகிறது. வீரபாண்டியனுக்குப்பொக்கணம் (திருநீற்றுப்பை) அளித்த மூர்த்தி இவர். பிரமன் தேவேந்திரன் வழிபட்ட தலம்.

கோயிலமைப்பு:

திருமுண்டீச்சரம் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. சுவாமி கோயிலுக்கு வலதுபக்கம் அம்பாள்கோயில் உள்ளது. இரண்டு சந்நிதிகளுமே கிழக்குநோக்கியுள்ளன.

கோயில் வாயிலைக் கடந்தவுடன் நந்தி பலிபீடங்கள் உள்ளன. ஒரே திருச்சுற்றுடன் கோயிலில் பழமையான கற்றளியாகக் காட்சி தருகிறது. வெளிப்பிராகாரத்தில் மேற்கே விநாயகர், ஆறுமுகர், அம்பாள் கோயில்கள் உள்ளன. ஈசானத்திசையில் யாகசாலையில் சூரியன் பஞ்சலிங்கங்கள் உள்ளன.

கோயில் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நடராஜர் மண்டபம், அலங்காரமண்டபங்களுடன் காட்சிதருகிறது.

சுவாமி சந்நிதியின் இடப்புறவாயிலில் சோமஸ்கந்தர் எழுந்தருளியுள்ள பெரியமண்டபம் உள்ளது. இவ்வழியேதான் சுவாமி கோயிலை அடையவேண்டும்.

வாயிலில் நால்வர்சந்நிதி உள்ளது. வழிபாட்டுமண்டபங்களைக் கடந்து உள்ளே சென்றால் சுவாமி சந்நிதியை அடையலாம். சுவாமி அருள்மிகு சிவலோகநாதரை வழிபட்டு அருள் பெறலாம். மண்டப வாயில்கள் தோறும் துவாரபாலகர்கள் உள்ளனர்.

சுவாமிகோயில் கர்ப்பக்கிருகத்தின் தென்பால் தக்ஷிணாமூர்த்தி விளங்குகிறார். கல்லால மரம் இல்லாமல் மலைமீது நந்திதேவரை வாகனமாகக் கொண்டு விளங்குகிறார். இருமுனிவர்களே அருகில் உள்ளனர். மேற்பால் இலிங்கோற் பவருக்குரிய இடம் உள்ளது. அருகில்திருமால் பிரமர் உள்ளனர். வடக்கே பிரமன் விளங்குகிறார். சண்டேசுரர் தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

அம்பாள்கோயில் மகாமண்டபத்தில் சப்தமாதர்கள் துர்க்கை உள்ளனர். நவக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளனர்.

மூர்த்திகள்:

சுவாமிபெயர் அருள்மிகு சிவலோகநாதர். இத்தலத்திருத் தாண்டகத்தில் இப்பெயரே குறிக்கப்பெற்றுள்ளது. ஆற்றுத்தளிப் பெருமானடிகள், திருக்கற்றளி மகாதேவர். திருமூலட்டானத்துப் பெருமானடிகள், ஆற்றுத்தளி மகாதேவர், ஆளுடையார், பொக்கணம் கொடுத்த நாயனார் முதலியபெயர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றன.

அம்பாள்பெயர் அருள்மிகு கானூர்குழலி. செல்வநாயகி, சௌந்தர்யநாயகி முதலிய பெயர்களும் உள்ளன.

தீர்த்தம்-பிரமதீர்த்தம் அல்லது முண்டகதீர்த்தம் எனவழங்கப் படுகிறது. தென்பெண்ணையாறும் தீர்த்தமாகும். தலமரம் - வன்னி.

புராண வரலாறுகள்:

துவாபரயுகத்தில் சொக்கலிங்க மகாராஜா என்பவர் வேட்டை காரணமாக இங்கு வந்தபோது பெரியகுளத்தில் விநோதமான தாமரைமலர் ஒன்றைக் கண்டார். ஏவலர் ஒருவரை அனுப்பி அதனைப் பறித்துவரச் சொன்னார். அத்தாமரைமலர் அவர்கைக்கு அகப்படமால் குளத்தில் சுற்றிவரக்கண்டு அதன்மீது அம்பெய்தார். அம்பு தாமரைமலரைத் தாக்கிற்று. குளம் செந்நிறமாயிற்று. மன்னர் மனம் மயங்கி அம்மலர் அருகில் சென்று கண்டார். அதன் மீது சிவலிங்கம் ஒன்று இருப்பதையும் அதன்முடி அம்பினால்தாக்கப் பட்டிருப்பதையும் பார்த்து மருண்டு அக்குளத்தினருகில் ஆலயம் ஒன்று எடுத்து சிவலிங்கத்தை அதில் பிரதிஷ்டை செய்து வழி பட்டார். நிவந்தங்கள் பலவும் ஏற்படுத்தி நித்தியநைமித்திக பூசைகள் இயற்றி வழிபட்டு அருள் பெற்றார்.

மன்னரின் அம்புபட்டுத் தழும்பெய்திய வடு சுவாமியின் திருமுடியில் உள்ளது. அதன்காரணமாகவே சுவாமிக்கு முடீசுவரர்எனப் பெயர் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.

வீரபாண்டியன் என்பவன் இத்தலத்தில் தங்கி வழிபாடாற்றிக் கொண்டிருந்தான். தென்பெண்ணைநதியில் நீராடி வழிபட்டு உண வருந்தமுற்பட்டபோது பெருமான் அவன்மடிமீது திருநீற்றுப்பொக் கணம் ஒன்றை விழச்செய்தருளினர். இறையருளால் தனக்குக் கிடைத்த அத்திருநீற்றை மன்னன் அணிந்து மகிழ்ந்தான். மற்ற வர்க்கும் அள்ளித்தந்து இன்புற்றான். சுவாமி இவ்வரலாறு காரணமாகப் பொக்கணமருளிய நாயனார் எனப் பெயர்பெற்றார். மன்னன் ஆலயத்திற்கு நிலபுலங்களை நிவந்தமாகக் கொடுத்து வழிபட்டு அருள் பெற்றுச்சென்றான்.

கல்வெட்டுக்கள்:

இத்திருக்கோயிலில் சோழ மன்னர்களில் முதற் பராந்தக சோழன், இரண்டாம் ஆதித்தகரிகாலன், முதலாம் இராசேந்திரன், குலோத்துங்கசோழன் முதலானோர் காலங்களிலும்; பாண்டியர்களில் கோனேரின்மை கொண்டானாகிய சுந்தரபாண்டிய தேவன், வீரபாண்டியதேவன் இவர்கள் காலங்களிலும், இராஷ்டிரகூட

மன்னரில் கன்னர தேவர்காலத்திலும், விஜயநகரமன்னரில் வீர விருப்பண்ணஉடையார் காலத்திலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக் கள் இருக்கின்றன.

கோயிலைக் கட்டியவரும், கட்டப்பெற்ற காலமும், ஊரின் பெயரும்:- இக்கோயிலைக் கருங்கல்லால் கட்டியவர் கேரள சிற்றரச ரூகிய வெள்ளாங்குமரன் ஆவர். இதை இவர் கட்டியது முதற்பராந் தக சோழனின் முப்பத்தாரும் ஆட்சி ஆண்டாகும். அதாவது கி. பி. 943. எனவே இக்கோயில் கட்டப்பெற்று இற்றைக்கு 1042 ஆண்டு கள் ஆகின்றன எனலாம்.

இதை உணர்த்தும் கல்வெட்டு, தமிழிலும் கிரந்தத்திலும் இருக்கின்றது. கிரந்தப்பகுதியில் இவ்வூர் மௌலி கிராமம் என்று கூறப்பெற்றுள்ளது. இரண்டாம் ஆதித்தகரிகாலன் கல்வெட்டு இக் கோயிலைத் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருமுடியூர் ஆற்றுத்தளி மகாதேவர் கோயில் என்று குறிப்பிடுகின்றது. இந்தகிரந்தப் பகுதியில் உள்ள மௌலி என்பதை விட்டுவிட்டு மக்கள் கிராமம் என்ற பெயராலே இன்றும் இவ்வூரை வழங்குகின்றனர்.

பொதுச்செய்திகள் :- கோனேரின்மை கொண்டானின் 18ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இக்கோயில் இறைவர் ஆற்றுத்தளி மூலஸ் தானம் உடையார் பொக்கணம் கொடுத்தருளிய நாயனர் என்னும் பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளார். வீரபாண்டியதேவன், இக் கோயிலில் சுந்தரபாண்டியன் சந்நிதியை ஏற்படுத்தினன்.

தலப்பெயரும் கல்வெட்டும் :

கல்வெட்டுக்களில் இவ்வூர் திருமுடீச்சுரம் எனக் காணப்படு கிறது. இவ்வூர் முடியூர் என்னும் நாட்டுக்குத் தலைமையூராக இருந்தமையால் முடியூர் நாட்டு முடியூர் எனக் கோப்பரகேசரிவன் மனின் 24 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது. கோப்பரகேசரிவன்மரான உடையார் இராசேந்திரதேவர் கல்வெட் டிலும் திரிபுவன சக்கரவர்த்தி இராசராசதேவரின் கல்வெட்டிலும் முடியூர்நாட்டுச் சதுர்வேதிமங்கலம் எனவும், திரிபுவனசக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் முடியூர் நாட்டுக் கிராமம் எனவும் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. கிரந்தக்கல்வெட்டொன்று இவ்வூரை மௌலிகிராமம் எனக்குறிப் பிடுகிறது. இவற்றை நோக்கினல் இவ்வூர் முடியூர் அல்லது கிராமம் எனவும், கோயில் முடீச்சுரம் எனவும் வழங்கப்பெற்று வந்தமை புலனுகும்.

தமிழ்நாடு

ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி

19, லாலா சந்து, தேரடி வீதி, மலைக்கோட்டை திருச்சி—620002.

தமிழ்நாடு, ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி மாநில மாநாடு, 1985ம் ஆண்டு மேமாதம் 30, 31ம் தேதிகளில், மாநிலத் தலைவர் கவிதாமணி டாக்டர். திரு. அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் திருச்செந்தூரில் சிறப்பாக நடந்தது. அடியிற்கண்ட தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன.

மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள்

1. ஹிந்து ஆலயங்களின் நில வருமானம் ஆலயங்களுக்குக் கிடைக்காமல் இருப்பதால், ஆலயங்களில் முறையாக பூஜைகள் செய்யவோ, அர்ச்சகர்கள், பணியாளர்கட்குச் சம்பளங்கள் வழங்கவோ, திரு விளக்குகள் ஏற்றி, திருவிழாக்கள் நடத்தவோ, முன்னோர்கள் கட்டளைகளை நிறைவேற்றவோ இயலவில்லை. குத்தகை வாரம், வசூல் செய்ய தடையாக இருக்கும் சட்டங்களிலிருந்து, ஆலயங்களின் நிலங்களுக்கு விதிவிலக்கு வழங்க வாக்குறுதி அளிக்கப்பட்டதை உடனடியாக நிறைவேற்றி, ஆலயங்களைக் காத்து உதவுமாறு, ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை இம்மாநாடு வேண்டுகோள் விடுத்தும்.

2. ஹிந்து ஆலயநிலங்களை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யவோ, மற்ற நபர்களுக்கு அல்லது ஸ்தாபனங்களுக்கு மாற்றவோ செய்யக் கூடாது என்றும்,

3. ஹிந்து ஆலய சொத்துக்கள், எந்தக் காரியங்களுக்காக கட்டளைதாரர்களால் கொடுக்கப்பட்டதோ அவைகளுக்கு மட்டுமே, அந்தச் சொத்துக்களும், அதன் வருமானங்களும் செலவிடப்பட வேண்டும் எனவும்,

4. ஆலய நிலங்களின் பாக்கிகளை வசூலிக்க, மற்றஇலாக்கக் களின் கடன் வசூல் போன்று ரொக்கவரி முறையில் வசூலிக்க வேண்டும் எனவும்,

5. ஹிந்து ஆலயங்களில் நடக்கும் களவுகளைக் கண்டுபிடிக்கவும், தடுக்கவும், வழக்குகள் போடவும், ஹிந்து சமய அறநிலையத் துறை சட்டங்கள் கடைபிடிக்கவும், தனியாக போலீஸ் பிரிவு அமைக்க வேண்டும் என H. R. & C. E. அமைச்சர் அவர்களைக் கேட்டு கொண்டும்,

(தொடரும்)

கட்டுரை எண். 61

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., D. Lit,
PH. D., D. P. P. A., D. U. N., I. U.

பருத்தியூர்

பாலினும் சொல் இனியாய்! பனிமாமலர் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை
வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ? அடியேன்முடைநாய்த் தலையே! 60

அ. பாலினும் சொல் இனியாய்!

(1) பாலைவிட இனிய சொற்களையுடையவளே என அம்பிகையினை அழைக்கிறார்.

(2) அவளது சொல் இனிமை குறித்து "பண்ணளிக்கும் சொல் பரிமளயாமளை" என்ற இடத்தில் விரிவாகக் கண்டோம். குழந்தை. வாலிபர், வயோதிகர், நோயாளி என்று எல்லோருக்கும் ஏற்ற எளிய இனிய உணவாக அமைந்து ஊட்டம் அளிப்பது பால். பருகுவோர்க்கே பால் அங்ஙனம் பயன்தரும். ஆனால் அம்பிகையின் இனிய சொல் கேட்டார்க்கும் கேளார்க்கும் எக்காலத்தும் பயன்தரும் கருணை மொழிகளாக அமைதலின் 'பாலினும் சொல் இனியாய்!' என்றார். "பாலையும் தேனையும் பாகையும் போலும் பனிமொழியே" என்பார் பின்னும்,

(3) ஏழு விடங்கத் தலங்களுள் ஒன்றாகிய திருவாய்மூரில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் பெயர் 'பாலின் நன்மொழியாள்' என்பதாகும். "பாலின் மொழியாள் ஒருபாகங்கண்டேன் பதினெண் கணமும் பயிலக் கண்டேன்" என்பது அப்பர் தேவாரம்.

ஆ. மாலினும் தேவர் வணங்க நின்றோன்
கொன்றை வார் சடையின் மேலினும்........

(1) திருமால் இன்னும் ஏனைத் தேவர்கள் போற்றி வணங்கித்தொழும் பெருமையுடைய சிவபெருமானின் கொன்றையணிந்த திருச்சடையின் மேற்பகுதியினைவிட என் தலையில் சாலச் சிறந்ததா என வினவுகிறார்.

(2) மால் + இனும் + தேவர்கள் என்று பிரித்துப்பொருள் கொள்ளுதல் வேண்டும். திருமால் மற்றைத்தேவர்கள் வணங்க நின்றோன் சிவபெருமான். அவன் சடையில் பிரணவத்தின் வடிவாகிய கொன்றை மலரினைச் சூடுபவன். அச்சடையின் மேல் அம்பிகையின் திருவடி சூட்டப் படுகிறது. அதனைவிட தனது முடைத்தலை சிறந்ததா என்கிறார்.

இ. கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு நாலினும்........

(1) கீழே இருந்து உன்னைப்போற்றிப்பாடும் வேதங்களின் மெய்யான நான்கு பிரணவ பீடங்களைவிட என் தலை சிறந்ததா என்கிறார்.

(2) எல்லாவற்றையும் கடந்த உயர்ந்த நிலையில் மேலே இருக்கும் அம்பிகையினை, கீழே நின்று வேதங்கள் போற்றிப் புகழ்கின்றன. போற்றப்படும் இறைவனைவிட போற்றுவோர் கீழே நின்று அதனைச் செய்தலே மரபு. அதன்படி வேதங்கள் கீழே நின்று போற்றிப்பாடுகின்றன. அதனால் 'கீழ்நின்று பாடும் வேதங்கள்' என்றார்.

(3) பீடம் என்பது உயர்ந்த தெய்வீகமான இருப்பிடம் அல்லது இருக்கை.

வேதங்களின் அந்தமாகிய - முடிவாகிய உபநிடதங்கள் இறைவனின் திருவடிப் பெருமையினைத் தொட்டுக் காட்டுகின்றன. அவளது உயர்ந்த திருவடியினைத் தொட்டுக்காட்டும் வேதத்தின் அம் மேலான பகுதியினைப் 'பீடம்' என்று குறிப்பிட்டனர்.

மெய்யான கடவுளைக் காட்டுவதால் அது மெய்ப்பீடம் ஆயிற்று. மற்றெல்லாப் பீடங்களும் காலத்தால் மாறுபட்டு அழியக் கூடியவையே. ஆகையால் அவை பொய்யானவை. மெய்ப் பீடமன்று.

பிரணவப் பொருளாகவும் வடிவாகவும் முடிவாகவும் இருக்கும் இறைவனை அப்பகுதி காட்டுவதால் அதனைப் பிரணவ பீடம் என்றனர்.

'பிர + நவம்' என்றால் சிறப்பான (விசேஷமான) புதுமை என்பது பொருளாகும். பின்னைப் புதுமைக்கொல்லாம் பெரும் புதுமையாய் நிற்கும் கடவுளின் திருவடியினைக் காட்டும் வேதத்தின் அவ்வுச்சிப் பகுதி 'பிரணவ பீடம்' என்று சிறப்புடன் அழைக்கப்பட்டது.

(4) இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் அவ்வாறு தொட்டுக் காட்டுவதால் அப்பீடங்களும் நான்காயிற்று என்பது ஒரு பொருள். " அந்நான்கு பீடங்களில் பதியும் நின் திருவடி பதிய என் தலை எங்ஙனம் சிறந்தது ? " என்கிறார்.

(5) மந்திர மயமான அப்பிரணவ பீடங்களை யோகத்தின் மூலம் எய்தும் சமாதிநிலையிலும் யோகிகள் உள்ளே உணரவும் காணவும் கூடும் என்பர்.

" தூலப்பிரணவம் சொருபானந்தப் பேருரை
பாலித்த சூக்கும மேலைச் சொருபப் பெண்
ஆலித்த முத்திரை யாங்கதிற் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த விதியே "

என்ற திருமந்திரம் அதனைக் குறிப்பிடுகிறது. அதன் படி அப்பிரணவ பீடங்கள் ஸ்தூலப் பிரணவபீடம், சூட்சுமப் பிரணவ பீடம், காரணப் பிரணவ பீடம், மாகாரணப் பிரணவ பீடம் என்று நான்காகக் குறிப்பிடப்படுகிறது.

(6) உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் என்பது தேவியின் பீஜாட்சரங்களுள் ஒன்றாகிய 'ஹ்ரீம்' என்பதே ஆகும் எனக் கூறி விளக்குகிறார். ஹ்ரீம் காரவேத உபரிஷதே நம: என திரிசதி புகழ்வதாலும், ஹ்ரீம் என்ற அட்சரத்துடன் திரிசதியில் அறுபத்தொன்பது நாமங்கள் துவங்குவதாலும் அதுவே மெய்ப்பீடம் என்பது அவர் கருத்து. அத்துடன் அப்பீஜாட்சரம் நான்கு பகுதிகளைக் கொண்டு திகழ்கிறது. அப்பகுதிகளே பீடங்கள் நான்காய்க் குறிப்பிடப்படுகின்றன என்கிறார்.

(7) அம்பிகை தனது ஸ்ரீ புரத்தில் சிந்தாமணி வீட்டில், பிரமா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன் ஆகிய நால்வரும்

கட்டிலின் கால்களாகவும், சதாசிவன் கட்டிலின் பலகையாகவும் அமைந்த இருக்கையில் அமர்வதாக தேவிபரமான நூல்கள் குறிப்பிடுகின்றன. சிவாகாரமான அம்மஞ்சம் ஒரு பீடத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது அப்பீடம் வேறு எதுவும் அல்ல. நான்கு வேதங்களே அப்பீடமாக அமைய அதன் மீது சிவாகாரமான மஞ்சம் போடப்பட்டிருக்கிறது. அதுவே மெய்ப்பீடம் நான்காகும். கட்டிலில் அமர்ந்து அம்பிகை தன் திருவடிகளைத் தொங்கவிடும் பொழுது அவை அவ்வேத பீடத்தின் மீது பதிகின்றன. இதனைச் சிங்கை நமச்சிவாயர் தமது உலகபமைக் கலித்துறை அந்தாதியில் :—

“ பாலான வேலையில் சிந்தாமணி மண்டபத்தில் மறை
நாலான பீடத்தை ஞானனந்தமாய் அருள் ஞாயிறுபோல்
மாலான தேவர் காலா லமைஞ்ச சத்துவத் திருக்கும்
மேலான வாழ்வையும் கண்டேன் பொருநையின்
மேற்புறத்தே ”

என்ற பாடலில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

ஈ. பனிமா மலர் பாதம் வைக்க சால நன்றே அடியேன் முடை நாய்த் தலையே.

(1) குளிர்ந்த மலரனைய நின் திருவடியினைச் சூட்ட, மேற் கண்ட கொன்றைவார் சடையினையும் மெய்ப்பீடம் நான்கினையும் விடமிகவும் சிறந்ததோ எளியேனுடைய நாற்றமெடுக்கும் தலை ?

(2) குளிர்ச்சியும் மென்மையும் பொருந்திய அவளது திருப் பாதம் எனது தலைமேல் வைக்க ஏற்காது எனத் தாழ்மையுடன் உரைக்கிறார். தனது தலையினை நாய்த்தலை எனச் சிறுமைபடக் கூறுகிறார். அதுவும் புலால் நாற்றம் வீசும் ‘ முடை நாய்த்தலை ’ என்கிறார்.

(3) வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்த நேசத்தை முன்பு வியந்தார். இங்குப் புன்மைமிக்கதன்தலைமீதுவைக்கவும் ஒண்ணுமோ என்கிறார். அபிராமி பட்டருக்கு அபிராமி திருவடி தீட்சை கொடுத்தருளியிருக்கிறாள் என்பதற்கு இப்பாடலும் ஓர் அகச் சான்றாக அமைகிறது.

(4) பிரணவாகாரமான கொன்றவார் சடையில் உன் திருவடி பதிக்கிறாய். மெய்ப் பீடங்கள் நான்கில் உன் திருவடி பதிக்கிறாய். அவ்வுயர்ந்த இடங்களை விட எனது முடை நாய்த் தலை சாலவா சிறந்தது ? நான் தகாப் பாத்திரம். நீ திருவடி

சூட்டியது உனது ஒப்பற்ற தனிப்பெருங் கருணையின் காரணத்தினாலேயே ஆகும். அடுத்த பாட்டில் அக்கருணையின் காரணங்களைச் சொல்வார்.

பணிவிலும் தன்னடக்கத்திலும் அபிராமி பட்டர் அப்பர் பெருமானையும் மணிவாசகரையும் போன்று உயர்ந்து நிற்பதைக் காண்கிறோம்.

(5) "அன்பு கொண்ட தொண்டர் முடிவைத்த வாறென் புலைத்தலை மேல்வைத்தது" எனமதுராபுரி அம்பிகை மாலையும் குறிப்பிடுகிறது. அதாவது, நினது திருத்தொண்டர்கள் முடியில் பதியும் திருவடி என் புலைத்தலை மீது எங்ஙனம் பதிந்தது?" எனத் தொண்டரினும் கடையனாய்த் தன்னைக் குலசேகர பாண்டியன் கூறிக் கொள்கிறான்.

வாழ்க்கையில் மேல்நிலை எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

எவன் ஒருவன் இனிமைக்கும் ஒளியுடைமைக்கும் (Sweetness and light) செயல்புரிகிறானோ, ஐக்கியப்படுகிறானோ அவன் கடவுளது அறிவும் எண்ணமும் உலகில் திகழச் செயல் புரிகிறான்.

— மாத்யூ அர்னால்டு

உலகில் ஒரே மதம்தான் உண்டு. காணப்படும் நூற்றுக் கணக்கான சமயங்கள் அதன் பல திறப்பட்ட பதிப்பாகும்.

— ஜார்ஜ் பெர்னார்டு ஷா

காமத்தையும் சினத்தையும், வெறுப்பையும் ஆணவத்தையும், சுயநலத்தையும் பேராசையையும் எவன் ஒருவன் வெல்கிறானோ அவன் அகிலத்தையே வென்றவனாகிறான்.

— ஜேம்ஸ் ஏலன்

ஒவ்வொரு சமயத்தின் ஒவ்வொரு கோட்பாடும், இந்தப் பகுத்தறிவு பரவிய காலத்திலே, அகில உலக ஏற்பு என்னும் திராவ சோதனைக்கு (acid test) ஆளாகத் தயாராக வேண்டும்.

— காந்தியடிகள்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., எம். ஃபில்.,

(மலர் 44, இதழ் 6, பக்கம் 325 இன் தொடர்ச்சி)

திருவுற்ற மார்பினன் செல்வமொடு நான்முகன்
செல்வ மிந்திரர்கள் செல்வஞ்
சித்தர்சா ரணர்வித்தி யாதரர்கள் செல்வமுந்
தேவர்மகிழ் வுறு செல்வமுந்
தருவுற்ற மாலைசெறி சகராஜர் செல்வமுஞ்
சார்ந்துளோர் தஞ்செல்வமுஞ்
தானென்று நானென்று வாழுமவர் செல்வமுஞ்
சர்வதரர் தஞ்செல்வமுங்
கருவுற்ற பணிலமுற் றுயர்காசி நகர்மேவு
கருணை கடாக்ஷ யுன்றன்
கழல்பரவும் அடியார்தஞ் செல்வத்தி லணுவளவு
காண அவர் செல்வமுள தோ
அருவத்தி லுருவாகி யுருவத்தி லருவாகும்
அரனிடப் பாகமுறைவாய்
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமையென்றே. (4)

(பொ - ரை) கருக்கொண்ட சங்குகள் உயர்ச்சிபெறும் காசிநகரிலுள்ள கருணைவிழியுடையவளே ! திருமகளை மார்பில் கொண்ட திருமாலின் செல்வமும், பிரமனின் செல்வமும், இந்திரர்களின் செல்வமும், சித்தர், சாரணர், வித்யாதரர்போன்றவர்களின் செல்வமும், தேவர்கள் மகிழ்வதற்குக் காரணமான செல்வமும், மரங்கள் தரும் மலர்களால் ஆகிய மாலைகளையணிந்த உலக அரசர்களின் செல்வமும், அரைசர் பின்னோர் என்று சொல்லப்படும் அரசரைச் சார்ந்த வணிகர்களின் செல்வமும் அறுவகைக் குணங்களைப் படர்க்கையாகவும் தன்மையாகவும் கொள்கின்ற அந்தணர்களின் செல்வமும், எல்லோரையும் தாங்குகின்ற வேளாளர்களின் செல்வமும்

உன்றன் திருவடிகளைப்போற்றும் அடியார்களின் செல்வத்தினை நோக்க அணுவளவுமாகாது போகுமே! அருவத்தில் உருவென்றும் உருவத்தில் அருவென்றுமுறையும் அரனின் இடப்பாகத்தில் இருப்பவளே! கருணைப்பார்வைகொண்டு அடிமையாம் என்னையும் ஆண்டிடுக.

(கு - ரை) திருமாலின் மார்பில் திருமகள் இடங்கொண்டுள்ளாள் -'விடுகணைக்குண்டு நாணும் பொன்னாகமே'-(காசி. கல 90) 'திருவைப் புணர்பொற் புயமைப் புயல்'-(மதுரை கல. 73) மாலை செறிசகராஜர் - என்றதன் பின் மூவர் செல்வம் கூறப்படவே வணிகர், அந்தணர், வேளாளர், -என எண்ணலாயிற்று. சார்ந்துளோர் - வணிகர் 'அரசர் பின்னோர்' (சிலம்பு - கொலை 44 தானென்று நானென்று வாழுமவர் - அந்தணர். ஓதல்ஓதுவித்தல் வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் இவ்வறுவகைப்பட்ட ஒழுகலாறுகளைப் படர்க்கையிலும் தன்மையிலுமாகக் கொள்பவர். ஓதல் - தன்மை-தன்வினை. ஓதுவித்தல் - படர்க்கை-பிறவினை.-எனக்காண்க. சர்வதரர்-எல்லாவற்றையும் தாங்குபவர்-வேளாளர்.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் (குறள் 1031)

இப்படியே நால்வகையோர் இருக்கை இருப்பதை

கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோ ரிருக்கையும்
வீழ்குடி உழவரொடு .... (சிலம்பு. இந்திர. 40-43)

என்று சிலப்பதிகாரம் காட்டுகிறது.

கருவுற்ற பணிலம் முற்றுயர் காசி - பணிலம் - இனம்பற்றி சிப்பி - முத்தையீன்று உயர்வு பெற்றதையும் கொள்ளலாம். இங்கே அருவுருவநிலை-உருவத்தில் அருவம்- அருவத்தில் உருவமென்று தெளிவாகச் சுட்டப்பட்டது நோக்கற்குரியது.

மடுத்த வுதரத்தினின் மிகுத்தனல் படுக்காது
வன்புழு வெடுக்காதுபின்
வாயுக் கெடுக்காது நீர்வளி விடுக்காது
வருபனித் துளியளவதாய்
எடுத்தசந் தொடுபழு திலாதரம் பீரல்பல்
விரதநிண முதரமாகி
இருகைகால் கொண்டவொரு தண்டமாய் விண்டுவி
னிருந்து விழு வார்களெனவே

தடுத்தபுவி தனிலதோ முகமதாய் விழஅன்னை
தன்றுயரு மென்துன்பமுந்
தாயாகி யெங்குநிறை தருவிசா லாக்ஷிநான்
சாற்றநீ யறியாததோ
அடுக்கடுத் திவ்வுட லுதித்துவா டாதசுக
ஆனந்த வமலமாக
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமையென்றே. (5)

(பொ - ரை) வயிற்றிடை வந்து சேர்ந்த பனித்துளியின் அளவேயுள்ள சீவன் - மிகுதியான வெப்பத்தால் தாக்கப்படாமல், வயிற்றிலுள்ள புழுக்களால் அழிக்கப்படாமல், வாயுவால் கெடுக்கப்படாமல்- நீர்வளி இவற்றால் வெளிப்படாமல் இருந்து எலும்பு, பழுதில்லா நரம்பு, ஈரல், பல், இரதம், நிணம், உதிரம் கொண்டு - இருக்கை கால்கொண்ட உருதண்டு வடிவொடு - விண்ணிலிருந்து விழுவார்களைப் போலத் தாங்கிய புவிமீதில தலைகீழாய் விழுகிறது. அது நாள் வரைக்குமாக அன்னை அடைந்த துன்பமும்-சீவனுகிய நானடைந்ததுன்பமும் எடுத்துச்சொல்ல வேணுமா! தாயாகி எங்கும் நிறைந்த தடங்கண்ணியே - இது நீ உணராததொன்றோ! அதனால் மீண்டும் மீண்டும் இவ்வுடல் உலகில் பிறந்து வருந்தாதபடி மலமற்ற ஆனந்தத்தைக் கடைக் கண்ணால் தந்து ஆண்டருள்க.

(கு - ரை) கருவாகியிருந்து ஒவ்வொரு நிலையிலும் அவதிப்பட்டுப் பிறக்கும் ஆன்மாவை - அத்துன்பத்தைத் தாங்கித் தியாகம் செய்யும் அன்னையைத்-திருவாசகம் நன்கு காட்டுகிறது.

"ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்
....
தக்க தசமாதி தாயொடு தான் படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்" (போற்றி 1-3-25 வரி)

'பனியின் வித்துளி போலவே கருவினூறு
மளவி லங்கொரு சூசமாய் மிளகுதுவர்
பனைதெ னங்கனி போலவே பலகனியின் வயிருகிப்
பருவ முந்தலை கீழாய் நழுவி நிலமருவி' - (திருப்பு - 240)

என அருணகிரியாரும் கூறுகிறார்.

நீரினூறு தண்மையுந் தீயினூறு வெம்மையும்
நிறைமலரி னூறுநாற்றமும்
நிகழெள்ளி லெண்ணெயும் புகழ்பாலி னெய்யுமாய்
நிறைந்திருந் தனையென்னவே

பாரின்மிகு புனலங்கி வாயுவா காயமும்
　　பகர்சரா சரமெங்கும்
பற்றிநின் றினிதுவள ரன்னமே சொன்னமே
　　பாலலோ சனவல்லியே
சீரின்மிக முலகெலா முதரத்தின் முன்னீன்ற
　　செங்கண்மால் தன்தங்கையே
திசைமுகன் முதலமரர் வந்துவந் தினிதுபணி
　　திகழ்பதாம் புயவல்லியே
ஆருமா தாரமிலர் கேதார மேயென்ன
　　அறைதுவது பொய்வார்த்தையோ
அருட்கடை செய்தாளுவாய் கேதார கௌரிநின்
　　அடிபரவு மடிமை யென்றே. 6

(பொ-ரை) நீரில் குளிர்ச்சியும் - தீயில் வெம்மையும் மலரில் நிறைந்த மணமும் - எள்ளில் எண்ணெயும் - பாலில் நெய்யும் எப்படிப் பிரிப்பின்றி நிறைந்துள்ளனவோ - அப்படி பூமியில் - மிகுபுனலில் - நெருப்பில் - வாயுவில் - ஆகாயத்தில் இன்னும் அசையும் அசையாப் பொருள்கள் யாவற்றிலும், பிரிப்பின்றி நிறைந்து நிற்கும் அன்னமே! பொன்போன்றவளே! சிறப்பு மிகுந்த உலகங்களை யெல்லாம் திருவயிற்றுள் அடக்கியிருந்து பெற்ற திருமாலின் தங்கையே திசைக்கொருமுகம் கொண்டானை முதலாகக் கொண்டதேவர்கள் வந்துவந்து பணியும் தாமரைப்பாதமுடையவளே! ஆதாரமற்றவர்கள் 'கேதாரமே' எனக்கூறினல் நீ ஆதரவு தருவாய் என்பது பொய்மொழிக்கோ அவ்வாக்கு பொய்யாதபடி எனக்கும் கடைக்கண் அருள்தந்து காத்திடுக.

(கு-ரை) விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்
　　மறைய நின்றுளன் மா மணிச் சோதியான்
　　　　— திருநாவு -(5-893)

சிவனைப்பிரியாத சக்தியும் அப்படியே இருப்பதாகக் கூறலாம்.

" ஆரணிசடைக் கடவுள் ஆரணி எனப்புகழ, அகிலாண்ட கோடியீன்ற அன்னையே, பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்தருபமயிலே " (தாயுமா - மலைவளர் - 5,) " திருமாலின் தங்கை உமை " - " செங்கண்மால் திருத்தங்கச்சியே " - (அபி-அந்-61.) திசைமுகன் முதலமரர் பணிதல். " மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னிக் குனிதரும் சேவடி " (அபி-அந்-4) "சிந்திப்பவர் நல்திசைமுகர் நாரணர்" என்றுப் அபிராமி அந்தாதி கூறும். தொடரும்)

நால்வர் காலம்

குடந்தை திரு. N. சேதுராமன் B. SC., D. M. I. T,
Director, Raman & Raman Private Limited

(மலர் 44, இதழ் 6, பக்கம் 332 இன் தொடர்ச்சி.)

ராஜசிம்மன் காஞ்சீபுரத்தில் தன் பெயரால் ராஜசிம்மேஸ்வரம் என்னும் சிவன் கோயிலைக் கட்டினான். அதுவே இன்றைய கைலாசநாதர் கோயில். இக்கோயிலில் இம்மன்னனது கல்வெட்டுக்கள் வடமொழியில் உள்ளன. மன்னனுக்கு இறைவன் அசரீரியாக உணர்த்தினன் என்று கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது18. எண்ணற்ற எதிரிகளைத் துகளாக்கிய இம்மன்னன் சைவ சித்தாந்தப் பாதையில் நின்றவன் என்றும் கூறப்பட்டுள்ளது. இவனது வீரத்தையும், சிவபக்தியையும் கூறும் இவ்வடமொழிக் கல்வெட்டுக்கள் மிக விரிவானவை 19. இடமின்மையால் விரிவுக்கு அஞ்சி விடுகின்றேன்.

பெரியபுராணத்தில் கழற்சிங்கநாயனர் புராணத்தில் கூறப்படும் பல்லவனும் வடபுல மன்னர்களை வென்றவன் என்றும், சிவபக்திகொண்டு சிவதர்மங்களும் தொண்டுகளும் செய்தவன் என்றும் கூறப்படுட்டுள்ளது. அவையாவும் ராஜசிம்மனுடைய கல்வெட்டுக்களில் – வடமொழிக் கிரந்தங்களில் விரிவாய்ச் சொல்லப்பட்டுள்ளன.

சுந்தரர் பூசலார் நாயனரையும் குறிப்பிடுகின்றார். பூசலார் நாயனரின் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் விரிவாக எடுத்துரைப்பார். பூசலார் அவதரித்த திருத்தலம் திருநின்றவூர். அவர் சிவபெருமானுக்குக் கோயிலெடுக்க நினைத்தார். ஆனால் அவரிடம் பொருள் இல்லை. ஆகவே தன் மனத்திலேயே சாத்திர விதிப்படி கோயில் அமைத்தார். மனதில்கட்டியகோயிலுக்குக் கடவுள் மங்கலம் என்னும் மருந்து சாத்துதல், குடமுழுக்கு விழா ஆகியவற்றுக்கு நன்னாள் அமைத்தார்.

---

18 South Indian Inscriptions – Tamil and Sanskrit – Volume I Page 14 Line 7.

19 Above Volume Page 8 to 22.

இஃது இவ்வாறு இருக்க, காஞ்சிபுரத்தில் பல்லவ மன்னன் கச்சிக் கற்றளி எடுத்தான். இறைவன் திருமேனியைத் தாபிக்கவும் நாள் வகுத்தான். ஆனால் அதற்கு முதல் நாள் இறைவன் மன்னனின் கனவில் தோன்றி, "நின்றவூர் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த நன்று நீடு ஆலயத்து நாளை யாம் புகுவோம். நீ உன்னுடைய நாளை மாற்றி அமைத்துக்கொள்" என்று அருளினார். மன்னனும் மறுநாள் பூசலாரைக் கண்டு வணங்கி இறைவன் கனவில் உரைத்ததைக் கூறினான். பூசலாரும் தாம் மனதில் கோயில் கட்டியதையும், குடமுழுக்கு விழாவிற்கு அன்றுதான் நன்னாளாக நினைத்ததையும் கூறினார். மன்னனும், பூசலாரும் இறையருளில் மூழ்கிப் பேரின்பம் அடைந்தனர்.

காஞ்சிபுரத்தில் முதன் முதல் கச்சிக் கற்றளி எடுப்பித்தவன் ராஜசிம்மனே. அவனுக்கு அசரீரியாக இறைவன் உணர்த்திய தாகக்கல்வெட்டும் கூறுகிறது. இவை பூசலார் நாயனார் புராணத்துடன் ஒத்து இருப்பதும் கணிக்கத்தக்கது 20. தொகுத்து நோக்கினால், சுந்தரரும் காஞ்சி கைலாசநாதர் கோயில் கட்டிய ராஜசிம்ம பல்லவனாகிய கழற்சிங்கனும், பூசலார் நாயனாரும் சமகாலத்தவர் என்பதை எளிதில் உணரலாம். எனவே சுந்தரர் காலத்தை 700 முதல் 728 வரை எனக் கொள்ளலாம்.

மாணிக்கவாசகர் காலம் :

நெடுஞ்சடையன் பராந்தகனாகிய முதல்வரகுணன் 768-இல் முடிசூடினான். இவனது கல்வெட்டுக்கள் 43-ஆம் ஆட்சி ஆண்டு வரை கிடைக்கின்றன 21. எனவே இவனது ஆட்சி 811-இல் முடிவடைந்த. அவ்வாண்டிலிருந்து வரகுணனின் மகனான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் ஆட்சித்துவங்குகிறது எனலாம். ஸ்ரீ வல்லபன் தனது 18-ஆம் ஆட்சி ஆண்டில் (829) சிங்களத்தை வென்றான் 22. செப்பேடுகளும் ஸ்ரீ வல்லபனின் சிங்கள வெற்றியைக் குறிப்பிடுகின்றன.

---

20 S. I. I. XII Introduction Page lii - "This is evidently an allusion to Periyapuranam wherein it is stated that the Pallava King was directed to postpone the consecration of this temple so that the Lord might be present elsewhere at a similar ceremony conducted in the mental plane by Saint Pusalar".

21 S. I. I. XIV No. 41 - Eruvadi Nanguneri Taluk.

22 S. I. I. XIV No. 44; Erukkangudi Sattur Taluk.

ஸ்ரீ வல்லபனிடம் தோற்ற சிங்களவர் வாளா இருக்கவில்லை. பாண்டிநாட்டின் மீது படையெடுக்க தக்க சமயத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தனர். இதனைச் சிங்களவர் ஸ்ரீ வல்லபனின் கடைசி காலத்தில் வெற்றிகரமாகச் செய்து முடித்தனர் இச் சரித்திர நிகழ்சிகளை இலங்கை சரிதமாகிய மகாவம்சம் விரிவாய் எடுத்துரைக்கிறது.

மகாவம்சத்தில் கூறப்படும் செய்தி வருமாறு: இலங்கையில் இரண்டாம் சேனன் கி. பி. 851-இல் முடிசூடினன். இவன் காலத்தில் பாண்டி மன்னனின் மகன் ஒருவன் தன் தந்தைக்கு எதிராக கிளர்ச்சி செய்தான். இலங்கை மன்னன் சேனனின் உதவியை நாடினன். தக்கதருணம் இதுதான் என்று உணர்ந்த இலங்கை மன்னனும் தனது 9-ஆம் ஆட்சி ஆண்டில் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து வெற்றி வாகை சூடினன். மதுரை மன்னன் போர்க் களத்தில் இறந்தான். மன்னனின் மகனைச் சிங் களவர் மதுரை சிம்மாதனத்தில் ஏற்றினர். சிங்கள மன்னன் "மதுரா துனு" என்ற பட்டம் கொண்டான். இந்நிகழ்ச்சியின் காலம் கி. பி. 860 என்று மகாவம்சத்தால் அறியலாம் 23. இப் போரில் இறந்தவன் ஸ்ரீ வல்லபனே. இவன் போரில் இறந்தான் என்னும் செய்தியினைப் பாண்டியர் செப்பேடுகளும் உறுதி செய்கின்றன.

கி. பி. 860-இல் மதுரை சிங்காதனத்தை அலங்கரித்தவன் ஸ்ரீ மாற ஸ்ரீவல்லபனின் மகனே ஆவான். இவன் தந்தையோடு முரண்பட்டவன். சிங்களவரின் துணைக்கொண்டு அரசைக் கைப்பற்றியவன். தன் தந்தை போர்க்களத்தில் சிங்களவர் களால் கொல்லப்படுவதற்கும் காரணமானவன். இம்மகன் யார் என்பதை பின்னல் பார்ப்போம்.

பாண்டியர் செப்பேடுகளின்படி ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்தவன் சடையவர்மனகிய வரகுணன மகாராசன். இவனை இரண்டாம் வரகுணன் என்று சரித்திர ஆய்வாளர் அழைப்பர். இவனது தம்பியின் பெயர் சடையவர்மன் பராந்தகன் வீரநாராயணன் என்பதாகும் அண்ணனும் தம்பியும் தங்கள் பாட்டனர் முதலாம் வரகுண னை நெடுஞ்சடையன்பராந்தகனின் பெயரைத் தரித்துள்ளனர் என்பது ஈண்டு நோக்கத்தக்கது.

---

23 South Indian Temple Inscriptions Volume III Part I ages 37 and 102.

இரண்டாம் வரகுணனின் நான்கு கல்வெட்டுக்கள் வானிலைக் குறிப்புக்களைக் கொடுக்கின்றன. அவைகளின் காலத்தைக் கீழே காணும் பட்டியலில் காணலாம்.

இரண்டாம் வரகுணன் காலம் 24

ஊர்க் கல்வெட்டு எண்	காலக்குறிப்பு	சமமான கிறித்துவ ஆண்டு
1. அய்யம்பாளையம் 705 / 1905	ஆட்சி ஆண்டு 8 சகவருடம் 792	கி. பி. 870-மார்ச் மாதம் 22-ஆம் தேதி முதல் 871 மார்ச் மாதம் 21-ஆம் தேதி வரை இடைப்பட்ட காலம்
2. திருவெள்ளறை 84 / 1910	ஆட்சி ஆண்டு 13 விருச்சிக மாதம், அச்வதி நக்ஷத்திரம் திங்கட்கிழமை	14 - ஆம் தேதி நவம்பர் மாதம் 875
3. சவந்திஷதபுரம் 104 / 1947	ஆட்சி ஆண்டு 13 தனுர் மாதம், அவிட்டம் திங்கட்கிழமை	5 - ஆம் தேதி டிசம்பர் மாதம் 875
4. லால்குடி 121 / 1929	ஆட்சி ஆண்டு 13 தனுர் மாதம், சதயம் செவ்வாய்க்கிழமை	6 - ஆம் தேதி டிசம்பர் மாதம் 875

திருவெள்ளறை, சவந்திஷதபுரம், லால்குடி ஆகிய ஊர்கள் திருச்சி மாவட்டத்தில் உள்ளவை. இக்கல்வெட்டுக்கள் எல்லாவற்றிலும்-வரகுண மகாராஜர் தனது அதிகாரியான அண்டநாட்டு வேளான் என்பவனிடம் நிதி அளித்து - கோயில்களில் நிசதம்விளக்கு எரிக்கநிவந்தங்கள் ஏற்படுத்தியதாகச் சொல்லப்பட்டுள்ளது 25. சவந்திஷதபுரத்துக் கல்வெட்டின் நாளுக்கு மறுநாள் லால்குடி கல்வெட்டின் நாளாக அமைவதையும் நோக்கவேண்டும்.

24 E. I. XXVIII No. 6; E. I. XXXII No. 41.

25 S. I. I. XIV; E. I. XXVIII No. 6.

இக்கல்வெட்டுக்களின் காலங்களைப் பின்னோக்கிக் கணித்தால்-இரண்டாம் வரகுணன் கி. பி. 863 இல் மார்ச் மாதத்திற்குப் பிறகு, நவம்பர் மாதத்திற்குமுன் ஏதோ ஒருநாளில் முடிசூடினான் என்பதை அறியலாம். அதாவது இரண்டாம் வரகுணன் முடிசூடியது கி. பி. 863 ஆகும். இம்மன்னனின் திருநெய்த்தானத்துக் கல்வெட்டு யாண்டு 4-இல் செதுக்கப்பட்டது 26. இதன் காலம் 866-67. வரகுண மகாராஜன் என்னும் பெயர் கொண்ட திருவிளக்கு ஒன்று எரித்த கோன்பராந்தகன் என்பது வரகுணனின் தம்பியே. இதனால் இவ்விருவரும் ஒற்றுமையாக இருந்தனர் என்பதை நன்கு அறியலாம். கோன் என்ற அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளதால் தம்பியாகிய பராந்தகன் 866 – இல் முடிசூடியிருக்க வேண்டும் என்று கொள்ளலாம். அதாவது அண்ணனே தன் தம்பிக்கு இளவரசுப்பட்டம் கட்டி வைத்தான்.

இச்சரித்திர நிகழ்சிகளைக் கோர்வையாகப்பார்த்தால் ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபனுக்கு மூன்று மகன்கள் இருந்தனர் என்பதை நன்கு அறியலாம். சிங்களவர் உதவிகொண்டு கி. பி. 860 – இல் மதுரையில் சிம்மாதனம் ஏறியமகன் வெகுநாள் ஆளவில்லை. மூன்று ஆண்டுகளில் அவனை வரகுணன் விரட்டி விட்டான். பின்பு தனது தம்பியையும் உடன் சேர்த்துக்கொண்டு நெடு நாட்கள் அரசு புரிந்தான்.

860-க்கும் 863-க்கும் இடைப்பட்டகாலத்தைமுக்கியமாகக் கவனிக்கவேண்டும். இக்காலத்தில் சிங்களவர்களால் மதுரை சிம்மாதனத்தில் வைக்கப்பட்டவன் யார்? அவனை விரட்டி விட்டு, வரகுணன் எவ்வாறு தனது ராஜ்யத்தைப் பெற்றான்? இவ்வினாக்களுக்கு உரிய விடைகளைத் திண்டுக்கல் வட்டத்தில் உள்ள பெரும்புல்லி என்னும் ஊரிலிருந்து கிடைக்கும் கல்வெட்டும் 27, பாண்டிய குலோதயா என்னும் வடமொழி சரித்திர வரலாற்றுக் காவியமும் அளிக்கின்றன.

சிங்களவரை விரட்டினால்தான் மதுரையை மீட்கமுடியும் என்பதைவரகுணன் உணர்ந்து, செயல்பட்டான். பெரும்புல்லிக் கல்வெட்டில் பாண்டியருக்கும், சிங்களவருக்கும் நடந்தபோர் நிகழ்ச்சி சொல்லப்படுகிறது. இப்போரில் பள்ளி வேளான் நக்கன் புல்லன் என்பவன் வரகுணனுக்கு உதவியாக இருந்து,

26 S. I. I. V. No. 608.

27 E. I. XXXII No. 31

சிங்களவரைவென்று, வரகுண மகாராஜருக்குப் பணி பலவும் செய்தான் என்று கூறப்படுகிறது வரகுணன் தனது ஆட்சியை 863 இலிருந்து கணக்கிடுவதால் அப்போர் அந்த ஆண்டிலேயே நடந்திருக்கவேண்டும்; மதுரையில் இருந்த சகோதரனும் அவ்வாண்டிலே விரட்டப்பட்டு இருக்கவேண்டும்.

பாண்டிய குலோதயா என்னும் வடமொழிக் காவியம் தெரிவிக்கும் அரிய செய்தி ஒன்றைக் காண்போம் 28. வரகுணனுடைய சகோதரன் இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு வரகுணனைத் துரத்திவிட்டான். மனமுடைந்த வரகுணன் காடுகளில் அலைந்து திரிந்து கடைசியில் திருவாதவூர் அடைந்தான். அங்குச் சிறந்த சிவபக்தராக விளங்கியவரும பல கலைகள் சாத்திரங்கள் அறிந்தவருமாகிய வாதபுரி நாயகர் என்னும் அந்தணரை அடைந்தான். அவருடைய அருள் ஆசியால் வரகுணன் தன் சகோதரனை மதுரையிலிருந்து துரத்திவிட்டு, பாண்டி மண்டலத்தை ஆளத்துவங்கினன். வாதபுரி நாயகர் என்று இங்கே கூறப்படுபவர் மாணிக்கவாசகரே ஆவர் மாணிக்கவாசகர் தொடர்பான மற்ற செய்திகளையும் பாண்டிய குலோதயா நன்கு விளங்குகிறது. நரியைப் பரியாக்கியது ஆகிய செய்திகளும் சொல்லப்படுகின்றன மாணிக்கவாசகர் வரகுணனுக்கு மந்திரியாக இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

எனவே கி. பி. 863-இல் மாணிக்கவாசகர் சாத்திரங்கள் பல அறிந்த சிவனடியாராக இருந்தார் என்பதையும், பின்பு பல ஆண்டுகள் வரகுணனுக்கு மந்திரியாகவும் இருந்தார் என்பதையும் அறிகிறோம்.

வரகுணன் தனது தம்பி பராந்தக வீரநாராயணனுக்கு கி. பி. 866-இல் முடி சூட்டி வைத்தான் என்பதை முன்பே கண்டோம். பராந்தகனின் தளவாய்புரச் செப்பேடு மன்னனின் 45-ஆம் ஆட்சி ஆண்டில், கி. பி. 911-இல் அளிக்கப்பட்டது 29.

---

28 Pandya Kulodaya Edition 1981 - Page 50 Introduction - Pages 194 to 20? of English Translation - Edited by Dr. K. V. Sarma - Published by Institute of Sanskrit and Indological Studies of Punjab University Hoshiarpur. When Dr. K. V. Sarma was editing the manuscript. I had the rare opportunity of associating myself with his research in identifying the historical characters referred to in the poem I am indebted to Dr. K. V. Sarma who has also acknowledged in the book my humble service.

29 பாண்டியர் செப்பேடு பத்து - தளவாய்ப்புர சாசனம்.

இதில் பராந்தக வீரநாராயணன் தன் அண்ணன் வரகுணனை எம்கோ என்றும், சிறந்த சிவபக்தன் என்றும் கூறுகிறன். வரகுணன் தவத்தை மேற்கொண்டு இனிதிருக்கும் நாளில் இச் சாசனத்தை வெளியிட்டதாகத் தம்பி பராந்தகன் கூறுகிறன்.

" எம்கோ வரகுணன் பிள்ளை பிறைச்சடைக்கணிந்த பிநாக பாணி எம்பெருமானை
உள்ளத்தில் இனிதிருவி உலகம் காக்கின்ற நாளில்... "

என்பது செப்பேடு வாசகம். இச்செப்பேடு வழங்கியகாலத்தில் வரகுணனும் உயிருடன் இருந்தனன் என்பதை அறியலாம். இச்செப்பேட்டில் பராந்தக வீரநாராயணன் வேறு ஒன்றையும் சொல்கிறன். அதாவது, வரகுணன் அண்ணன்; அவன் சிவ தர்மத்தில் ஈடுபட்டவன். அவன் உலகத்தைக்காத்து வருகின்ற னன். செப்பேட்டை வழங்கும் பராந்தக வீரநாராயணன் அக்களநிம்மிடி வயிற்றில் பிறந்தவன். பராந்தகன் தனக்கு முன் பிறந்தவனைச்செந்நிலத்தில் தோற்கடித்தான் இதனல் வரகுண னின் தாயும், பராந்தகனின் தாயும், வேருவர்என்பதை எளிதில் உணரலாம். பராந்தகனல், தோற்கடிக்கப்பட்டவன் வரகுண ஞக இருக்க வாய்ப்பு இல்லை. எனவே அவன் வேறு ஒருவளின் மகன் என்பதையும் நன்கு அறியலாம் தொகுத்து நோக்கினல் ஸ்ரீ வல்லபனுக்கு மூன்று மனைவிகள் இருந்தனர்: முத்த வளின் மகன் வரகுணன்; இளையவளின் மகன் ஒருவன்; மூன்ருமவளின் மகன் பராந்தக வீரநாராயணன் ஆவான் என்னும் உண்மைகள் புலப்படும்.

பட்டத்து அரசியான முத்தவளின்மகன் வரகுணன் வயதில் சிறியவனகவும் இளையவளின் மகன் வயதில் பெரியவனகவும் இருந்திருக்கலாம். பட்டத்து அரசியின் மகனே முடிசூட வேண்டும் என்று தந்தை நினைத்திருக்கலாம். இதனைப் பொருத இளையவளின் வயிற்றில் பிறந்தவன் - வயதில் பெரியவன் - சிங்களவர்களுடன் சேர்ந்து துரோகச் செயலில் ஈடுபட்டான் எனலாம். இத்துரோகச் செயலில் ஈடுபட்டவனின் பெயர் வீரபாண்டியன. இதனைக்கொடும்பாளுரில்வாழ்ந்தபூதி விக்கிரம கேசரியின் கல்வெட்டால் அறியலாம். பூதிவிக்கிரமகேசரியும், வரகுணனும், பராந்தகனும் சமகாலத்தவர்கள், நண்பர்கள், பூதிவிக்கிரமகேசரி வீரபாண்டியனைத் தோற்கடித்ததாகக் கொடும்பாளுர் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளது 30. அந்த வீரபாண்டியன் வரகுணனின் சகோதரன் என்பதைச் சரித்திர நிகழ்ச்சிகளின் துணைக்கொண்டு அறிகிருேம். (தொடரும்)

30 S. I. I. ×IX Introduction; S. I. I. ××III Introduction. S. I. I. ×××III - 129; K. V. Subramania Iyer - quarterly Journal of Mythic Society Volume ×LIII Nos. 3 and 4.

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜென்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் திங்கள்தோறும் தேவாரப்பாடல்பெற்ற தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. வைகாசித்திங்கள் 13 ஆம்நாள் (26—5—1985) ஞாயிறன்று திருமுண்டீச்சரம் அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருப்பதிகப் பாராயணமும் நிகழ்த்தப்பெற்றன. "திருமுண்டீச்சரத் திருப்பதிகம்" என்ற நூல் வெளியிடப்பெற்றது. தருமையாதீனப்புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., உரையாற்றினர். அன்பர் பலர் வழிபாட்டிற் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை பத்து மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்களும் பக்தர்களும் வந்து வணங்கிவழிபட்டு அருளுபதேசம்பெறும் வழிபாட்டுக்கூட்டம் நிகழ்வது வழக்கம். 48-வது அருளுபதேசக் கூட்டம் 2—6—85 அன்று நிகழ்வுற்றது.

வழிபாடும் பிரார்த்தனையும் முதற்கண் நிகழ்ந்தன. திருத்தொண்டர் புராண வரிசையில் இம்மாதம் மூவர் முதல்வர் திருஞானசம்பந்தர் பற்றிய சிந்தனை நிகழ்ந்தது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தம்அருளுபதேசத்தில்முதலில் இம்மாதத்தின் சிறப்பினை ஓதியருளினர்கள். புராணத் தொடக்கத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளின் தனிச்சிறப்புப் பற்றியும் அவர்தம் பெருமைகள் பற்றியும் முன்னுரையாகப் பல மேற்கோள்கள் கொண்டு விளக்கியருளினர்கள்.

திருமயிலாடுதுறை அன்பர்களும் பக்தர்களும் இம்மாதாந்தரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் எய்தினர்கள்.

அடுத்தது 49-வது அருளுபதேசத் திருக்கூட்டம் 7—7—85 அன்று நிகழவுள்ளது. கலந்து கொண்டு அன்பர்கள் பயன் அடைக!

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜைவிழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் சதயநாள் குருபூஜைவிழா 13—5—85 திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. காலை சமயாசாரியர், சந்தானசாரியர்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். மாலை 7-30 மணியளவில் வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர் எம். ஏ., "திருநாவுக்கரசர் அருள்வரலாறு" பற்றியும், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., " திருநாவுக்கரசர் திருத்தொண்டின் நெறி " பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் பண்ணிசைப் பாராயணத்துடன் திருவீதி உலா நடைபெற்றது.

தருமையாதீனத்தில்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் பெருவிழா

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 30—5—85 அன்று தொடங்கிப் பெருவிழா நிகழ்வுற்றது. நாள்தோறும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக்காட்சி நிகழ்ந்தது திருவீதியுலாவின்போது ஆதீன வேத சிவாகம பாடசாலை தேவார பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளும் வேத பாராயணமும் திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தினார்கள். அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

குருபூஜைப்பெருவிழா :

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப்பெருவிழா 8—6—85 சனிக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவிலுள்ள குருமூர்த்தங்களைவழிபட்டு ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ

அபிஷேக ஆராதனை செய்தார்கள். "கயிலைமாமுனிவர்" திருப்பனந்தாள் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் வழிபாட்டிற்கலந்து கொண்டு திருவருட்பிரசாதம்பெற்று மகிழ்ந்தார்கள். நண்பகல் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அர்ச்சனை ஆகியவையும் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி, வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். குருபூஜைவிழாமலராகச் "சித்தாந்த சைவ வினா விடை" என்னும் நூல் வெளியிடப்பெற்றது. ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு நிறைவெய்திய பின் நண்பகல் மாகேசுவரபூஜை நிகழ்வுற்றது. குருபூஜைவிழாவில் அன்பர்கள் பலரும் கலந்துகொண்டு வழிபட்டுப்பயனுற்றனர்.

குருமூர்த்த தரிசனம் :

குருபூஜைத் திருநாள் 8—6—85 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் மாலை 6—30 மணியளவில் நாதசுர இன்னிசை முழக்கத்துடன், திருமஞ்சனவீதியில் அமைந்திருக்கும் குருமூர்த்தங்களைத்தரிசித்து வழிபாடாற்ற எழுந்தருளினார்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள் வரலாறு கூறப்பெற்றது. குருமூர்த்த வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலட்சுமிதுர்க்காதேவி, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில் வழிபாடாற்றித்திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குக் குருபூஜைத் திருநாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடுகள் திருமெய்ஞ்ஞானநிவேதனத்துடன் நிகழ்த்தப்பெற்றன. வழிபாட்டிற்குப் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கொலுவிற்றிருந்து அருட்காட்சி வழங்கியருளினார்கள். "கயிலைமாமுனிவர்" ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் கொலுவழிபாடு நிகழ்த்தினார்கள். ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்களும் அறிஞர்பெருமக்களும்அன்பர்களும்தரிசித்து அருட்பிரசாதம்பெற்றுய்ந்தனர்.

பட்டினப்பிரவேசம் :

9—6—85 ஞாயிற்றுக்கிழமை பட்டினப்பிரவேசத் திருநாள். அன்றுகாலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குவிசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. காலை சிவபூஜாதுரந்தரர்கள் சிவபூசை புரிந்தகாட்சி மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. நண்பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது. இரவு தருமையாதீன இசைப்புலவர், தமிழக அரசுக் கலைஞர், டாக்டர் சீர்காழி திரு.

எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடை பெற்றது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் சிவிகையில் எழுந்தருளித் திருவுலாக் காட்சி தந்தருளினர்கள். "கயிலைமா முனிவர்" ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகளும் திருக்கூட்டத்து அடிய வர்களும், அறிஞர் பெருமக்களும அன்பர்களும் உடன்வரத் திருவுலாக்காட்சி நடைபெற்றது. திரு. A. K. C. நடராஜன் குழலிசை, புகழ்பெற்ற கலைஞர்களின் நாதசுர இன்னிசையுடன் திருமுறை இன்னிசையும் முழங்கத் திருவீதியுலாக் காட்சி நிகழ்ந்தது. தருமையாதீனத் திருவீதிகளில் அன்பர்கள் பூரண கும்பங்கள்வைத்து ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் அவர்களைவழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர். திருவுலாக்காட்சி நிறைவெய்தியதும் கொலுக்காட்சி நடைபெற்றது. அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் ஆசியருளி, அருட்பிரசாதம் வழங்கினர்கள்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவையொட்டி 30—5—85 முதல் 9—6—85 முடிய, திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 7 மணிக்குத் திருநெறியதெய்வத் தமிழ் மாநாடு நிகழ்வுற்றது. கருத்தரங்கம், பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், வரலாற்றுக் கருத்தரங்கம், திருக்குறள் வினு - விடையரங்கம் முதலிய நிகழ்ச்சிகள் சிறப் பாக நடைபெற்றன.

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் ஸ்ரீலஸ்ரீ தவத்திரு. குன்றக்குடி மகாசந்நிதானம், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் கயிலைமாமுனிவர் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் ஆகியோர் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், மற்றும் செந்தமிழ்ப்புலவர் திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்சி. பி. எல், தவத்திரு. வீரபாகு சுவாமிகள், திரு. சி. ஆர். குஞ்சிதபாதம், பி. ஏ. பி. எல். திரு. இரா. சிவபுண்ணியம் பி. ஏ, பி. எல். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., திரு. வி. ஆறுமுகம் பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு), வித்துவான் திருமதி. ப. நீலா. எம் ஏ, எம். ஃபில். டாக்டர். சிவ. பார்வதி, திரு. டி. என். அருணசலம், பி. ஏ. பி. எல். டாக்டர். திரு. மு, சுவாமிநாதன், ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். மாண்புமிகு சத்துணவுத்திட்ட

அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராஜன், மாண்புமிகு வீட்டு வாரியத்துறை அமைச்சர் திரு. ந. நல்லுசாமி, பி. ஏ. பி. எல். அவர்களும் கலந்து கொண்டனர். மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார், தவத்திரு. ஊரன் அடிகள், திரு. எஸ். எம். குமரேசன், திரு. டி. என். இராமச்சந்திரன், வித்துவான் திரு. இராமசேஷன். டாக்டர் மகா. வெங்கடராமன், திரு. த. அகரமுதல்வர், பாவலர் திரு. ச. பாலசுந்தரம், திரு. அ. கலியபெருமாள், திரு சொ. அரியநாயகம், டாக்டர். திரு. சிங்காரவேலன், டாக்டர் இரா. கலைக்கோவன், டாக்டர் ஔவை து. நடராஜன், திரு என். சீனிவாசன், பேராசிரியர் ஆதி. முருகவேள், திரு சி. சு. மணி, கவிஞர் சோமன், கவிஞர் ஞானச்செல்வன், திருமதி. சாரதா நம்பியாரூரன், திருமதி. புனிதா ஏகாம்பரம், டாக்டர். ஏ. வி. ஜெயசந்திரன், திரு. என். சேதுராமன், திரு. கே. ஆர். சீனிவாசர், புலவர் திரு. இராமமூர்த்தி, முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. பி. டி. ஆர். கமல தியாகராஜன், டாக்டர் தெ. ஞானசுந்தரம், புலவர். மு. வைத்தியநாதன், திருமதி. துரைவள்ளி, பெங்களூர் திரு. எம். வி. ஜெயராமன். டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் அ. சாமிஐயா, திரு சு. ρ, சுந்தரராஜன், திரு. மு. சுந்தரேசம்பிள்ளை, திரு. சண்முகசுந்தர தேசிகர், திரு. வை. முருகையா தேசிகர், டாக்டர் திரு. கே அரங்கசாமிபிள்ளை முதலிய அறிஞர்களும் புலவர்களும் அதிகாரிகளும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

திரு. ஆ. கிருஷ்ணன் அவர்களின் யோகாசன நிகழ்ச்சி, சேலம் நீலா பாலகிருஷ்ணனின் நாட்டியநிகழ்ச்சி, திரு. பி. டி. ஆர். கமலதியாகராஜன் குழுவினரின் வேயங்குழலிசை, மயிலாடுதுறை மாஸ்டர் பி. விஜயராகவன் பரதநாட்டியம், பூதாமூர் திரு. பி. ஏ. இராமலிங்கம் குழுவினரின் மெல்லிசை, மயிலாடுதுறை ஸ்ரீ குருஞானசம்பந்தர் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவ மாணவிகளின் நாட்டியக்கலை நிகழ்ச்சி, தேவார இசைமணி சீகாழி எஸ். திருஞானசம்பந்தம், தேவார இசைமணி திருச்சி எஸ் முத்துக்கந்தசாமி ஆகியோர் நிகழ்த்திய திருமுறை இசையரங்கு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பும் சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பும்

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டித் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் 30—5—85 முதல் 7—6—85 முடிய ஒன்பது நாட்கள்

மாலை 5-30 முதல் 6-00 மணிவரை தேவாரப்பண்ணிசை வகுப்பு நடைபெற்றது. திருமுறைக்கலாநிதி தருமை திரு. ஆர். வேலாயுத ஓதுவாமூர்த்திகள், கலைமாமணி, திருப்பனந்தாள், திரு. எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர் ஆகியோர் வகுப்புநிகழ்த்தினர். பலர் பங்குகொண்டு பயனுற்றனர்.

நாள்தோறும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை, மாதவச் சிவஞான முனிவர் இருநூறுவதாண்டு நினைவாகச் சைவசித்தாந்தப்பயிற்சிவகுப்புநடைபெற்றது. பேராசிரியர் ஆ. தி. முருகவேள் அவர்கள் சிவஞானபோதம்கொண்டு சைவசித்தாந்தப் பயிற்சி அளித்தார். கலந்துகொண்ட அன்பர்கட்கு சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன.

ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாணவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் என வழங்கும் திருப்பெருமணநல்லூர் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாணவிழாவும், சிவஜோதி தரிசனமும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் 3—6—1985 திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன. வேளூர் வித்துவான் திரு. தி. வை. முருகையா தேசிகர், "ஞானசம்பந்தர் அற்புதங்கள்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றித் தேவார வகுப்பு மாணவ மாணவிகட்குப் பரிசுவழங்கினார்கள். அன்பர்பலர் விழாவிற் கலந்துகொண்டு இறையருள்பெற்றனர்.

வேளூரில் வசந்தோற்சவம்

தருமையாதீனத்திற்குச்சொந்தமானவைத்தீசுவரன்கோயில் என வழங்கும் புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் 24—5—85 வெள்ளிக்கிழமைதொடங்கி 2—6—85 ஞாயிற்றுக்கிழமைவரை பத்துநாட்கள்வசந்தோற்சவவிழாமிகச் சிறப்பாக நடைபெற்றது. பத்துநாட்களிலும் சுவாமி, அம்பாள் புறப்பாடாகி வசந்தமண்டபத்தில் ஊஞ்சல் உற்சவம்கொண்டருளிய காட்சியை அன்பர் பலர் தரிசித்து அருள்பெற்றனர்.

அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் செய்திகள்

செய்திமடலும் சிறப்பிதழும் :

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளைப்பற்றி மூன்று மாதத்திற்கு ஒருமுறை மடல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுவருகிறது. முதல்மலர் ஏப்ரல் 1-ம் தேதி

வெளியிடப்பட்டது. பாரதத்தில் உள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இந்த மடலை வேண்டுவோர் 50 பைசா தபால்தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

அடுத்து இரண்டாவது மடல் ஜூலைமாதம் முதல் தேதி வெளிவரும்.

நிறுவனத்தின் சிறப்பிதழ் ஆறுமாதத்திற்கு ஒருமுறை வெளியிடப்படும். சைவசித்தாந்தத்தைப்பற்றி ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடங்கியது இந்த இதழ். இந்த இதழுக்குத் தஞ்சை திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் ஆசிரியராக இருப்பார். இந்த இதழ் ஜூலை மாதம் முதல்தேதிவெளியாகும். நல்ல அரிய பலகட்டுரைகள்கொண்ட இதழைவாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 25 க்கு டிமாண்டு டிராப்டு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்,
அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
வடக்கு வீதி,
தருமபுரம், மயிலாடுதுறை - 609 001.

மாதவச்சிவஞானமுனிவர் இருநூறுவது ஆண்டுநினைவாகச் சைவ சித்தாந்தப் பயிற்சி முகாம்கள்

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் ஏப்ரல் 24 முதல் ஜூன் 20 முடிய ஆறு இடங்களில் பயிற்சி முகாம்கள் வெற்றிகரமாக நடைபெற்றன.

கோவை :

கோயம்புத்தூரில் ஏப்ரல் 24, 25. 26, 27, 28, 29வ முடிய பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீல ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம், நிறுவனத்தின் சார்பில் கோவை சற்குரு சமாஜத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. பணி மன்றத்தின் தலைவர் திரு. இராம. ஏகப்பன், அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் முதலியவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்பான முறையில் செய்திருந்தனர். முகாம்களில் பங்கு கொண்டவர்களுக்குச் சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. குன்னூர் ஸ்ரீ சற்குரு ஆசிரமம் தவத்திரு. இராமலிங்கஅடிகளார் அவர்கள் முகாமைத் தொடங்கிவைத்தார். முகாமில், நிறுவன இயக்குநர் டாக்டர் ஏ. வி. ஜயசந்திரன், டாக்டர் சொ. சிங்காரவேலன், திருமதி. ப. நீலா, டாக்டர் மு. சிவச்சந்திரன், டாக்டர் இரா. செல்வக் கணபதி முதலியோர் பங்குகொண்டனர்.

மதுரை :

திரு. பி. டி. ஆர். கமலதியாகராஜன் அவர்களைத் தலைவராக வும், திரு. தா. குருசாமிதேசிகர் அவர்களை அமைப்பாளராகவும் கொண்ட ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றமும், நிறுவனமும் இணைந்துநடத்திய சைவசித்தாந்தப்பயிற்சி முகாம் 3-5-85முதல் 9—5 – 85 முடிய சிறப்புற நடைபெற்றது. காலை நிகழ்ச்சிகள் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்திலும், மாலை நிகழ்ச்சிகள் மதுரைத்திருக்கோயிலில் உள்ள திருவளளுவர்கழ கத்திலும் நடைப்பெற்றன. தினந்தோறும் காலை 9 மணி முதல் 10 மணி வரை திருமுறைப் பயிற்சி பொருள் விளக்கத்துடன் நடைபெற்றது. மாலை 5-00 மணிமுதல் 6-30 மணிவரை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் சைவசித்தாந்தத்துறை பேராசிரியர் டாக்டர் திரு. எஸ். கங்காதரன் அவர்கள் " திருவருட்பயன் " பாடம் நடத்தினர். 6-30 மணி முதல் 7-30 மணி வரை சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. டாக்டர் திரு. ஆர். வெங்கட்ராமன், டாக்டர் திரு. சுப. அண்ணாமலை, டாக்டர் திரு. பா. சூரியநாராயணன், டாக்டர் விஜயவேணுகோபால், புலவர் நீ. சி. சுந்தாராமன், டாக்டர் கோமதி சூரியமூர்த்தி, டாக்டர் டி. பி. சித்தலிங்கையா, சிவத்திரு எஸ். தங்கப்பட்டர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். நிறுவன இயக்குநர் டாக்டர் ஏ. வி. ஜயசந்திரன் நிறைவுநாளன்று தொகுப்புரை வழங்கினர்.

திருச்சிராப்பள்ளி :

திருச்சிராப்பள்ளி, தருமையாதீனம் மௌனமடம் ஸ்ரீ தாயு மானவர் நிலயத்தில் நிறுவனத்தின் சார்பில் 12—5— 85 முதல் 19—5—85 முடிய சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்புகள் சிறப்புற நடைபெற்றன. 12—5—85 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்குத் திருமுறைவீதியுலா யானைமேல் திருமுறைகள்வைத்து திருமுறை இன்னிசையுடன் நிகழ்ந்தது. சிவநெறிப்புலவர் ப. முக்கப்பிள்ளை தலைமையில்கவிதாமணி அ. வெ. ரா. கிருஷ்ண சாமி ரெட்டியார் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்தார். மகாவித்துவான் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் " சிவப் பிரகாசம் " பாடம் நடத்தினர். தினமும் மாலை 5-00 மணி வரை திருப்பனந்தாள் கலைமாமணி சோ. முத்துக்கந்தசாமி தேசிகர், தேவார இசைமணி வே. பாலசுப்பிரமணிய ஓதுவார் திருமுறை பண்ணிசைப் பயிற்சியளித்தார்கள். 7-00 மணி முதல் 8-30மணி வரை சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. புலவர் திரு. மு. வைத்தியநாதன், டாக்டர் ஏ. கோபிநாத், டாக்டர் ப. ஆறுமுகம், டாக்டர் மகா. வேங்கடராமன், பேராசிரியர் ஆ. சி. முருகவேள், டாக்டர் மா. இரா. கலைக்கோவன் ஆகியோர்

சொற்பொழிவாற்றினர். டாக்டர் வி. ஜெயபால், திரு. ஜி. கனகசபை, எம். கோவிந்தம்பிள்ளை, டாக்டர் எஸ் ஞானசுந்தரி முதலியவர்கள் தலைமை வகித்தார்கள். நிறைவு நாளன்று நிறுவன இயக்குநர் டாக்டர் ஏ. வி. ஜயசந்திரன் தொகுப்புரை அளித்தார். திருச்சிராப்பள்ளி காவல்துறை திரு. எல். என். வேங்கடேசன் ஐ. பி. எஸ். அவர்கள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினர்.

சென்னை :

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் சைவ சித்தாந்த கோடைக்காலப் பயிற்சி முகாம் 22—5—85 முதல் 28—5—85 முடிய சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் செயற்குழு ஒன்று சிறப்பாக இந்த முகாமை அமைத்துத்தந்தது. சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள் "சிவஞானபோதம்" பாடமும், 22, 23 24—5—85 நாட்களில் டாக்டர் தெ. ஞானசுந்தரம் "சிவஞானசித்தியார்" வகுப்பும் நடத்தினர்கள்.

22—5—85 காலை கணபதி ஹோமம் செய்யப்பட்டு விழா தொடங்கப்பட்டது. மாலை சிவாவிஷ்ணு ஆலயத்திலிருந்து திருமுறை, நால்வர் திருவுருவப்படம் மங்கள இசை திருமுறை இசையுடன் ஊர்வலமாக நிலையத்திற்கு வந்தது. மாலையில் வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் முன்னிலையில் இயக்குநர் டாக்டர் ஏ. வி. ஜயசந்திரன் முகாமின் நோக்கங்கள் பற்றி விளக்கினர். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கு. ஆளுடைய பிள்ளை தலைமைப்பேருரை ஆற்றினர். அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புப் பேருரையாற்றினர். தமிழ்நாடு சட்டமேலவைத் தலைவர் மாண்புமிகு சிலம்புச்செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்துச் சிறப்பித்தார்.

நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கியவர்கள் :— திருமதி சௌந்தரா கைலாசம், காவல்துறை ஆணையர் ஸ்ரீபால், மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி தக்கார் திரு தியாகராஜன், திருமயிலை பி எம். சுந்தர முதலியார், சத்துணவு அமைச்சர் மாண்புமிகு ஆர். சௌந்தரராஜன் ஆகியோர்.

நிகழ்ச்சிகளில் சொற்பொழிவாற்றியவர்கள் :— டாக்டர் கே. லட்சுமணன், டாக்டர் கே. விமலா, திரு. ஏ. சுப்பிரமணிய பிள்ளை, திரு. ஜி. எம். முத்துசாமிப் பிள்ளை, டாக்டர் அ. சரசுவதி

திருமதி. இராஜலட்சுமி இராமச்சந்திரன், திரு. ஏ. இராமச்சந்திரன், டாக்டர் சு. பாலச்சந்திரன் ஆகியோர்.

தொடக்க, முடிவு நாட்களின்போது டாக்டர் பார்வதி வரவேற்புரை நிகழ்த்தினர்கள். நிறுவன இயக்குநர் டாக்டர் ஏ. வி ஜயசந்திரன் விளக்க - தொகுப்புரைகள் ஆற்றினர்கள். கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

தருமை :

தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழாவினையொட்டிச்சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்புகள் தருமையில் நடந்தன.

30—5—85 முதல் 7—6—85 முடிய தருமையாதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன. திருமுறைக்கலாநிதி திரு. ஆர் வேலாயுத ஓதுவாமூர்த்திகளும், திருப்பனந்தாள் கலைமாமணி திரு. எஸ். முத்துக்கந்தசாமி தேசிகரும் வகுப்புகள் நடத்தினர் கள். திருவாடுதுறை ஆதீனப்புலவர் திரு. ஆதி. முருகவேள் "சிவஞான போதம்"என்றநூலைக் கொண்டு பாடம்நிகழ்த்தினர். பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டவர்கட்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

திருநெல்வேலி :

14—6—85 முதல் 20—6—85 முடிய திருநெல்வேலி தருமை யாதீனத் திருமடத்தில் சிறப்பாகச் சைவசித்தாந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

14—6—85 மாலை 5 மணிக்கு, திருமுருக கிருபானந்தவாரியார் வகுப்புகளைத் தொடங்கிவைத்து சிறப்புரை யாற்றினர்கள். நிறுவன இயக்குநர் டாக்டர் ஏ. வி. ஜயசந்திரன் விளக்க வுரையும் பேராசிரியை ப. நீலா தருமையாதீன வரலாறு என்ற பொருள்பற்றியும் சிறப்புரையும் வழங்கினர்கள்.

திருப்பனந்தாள் தமிழ்க்கல்லூரி முதல்வர் டாக்டர் கு. சுந்தரமூர்த்தி "சிவஞான சித்தியார்" பாடம் நடத்தினர். சொற்பொழிவாளர்கள்: திருமதி. ப. நீலா திரு. சி. சு. மணி, திரு. தி. வி. கல்யாணசுந்தரம், திரு. சு. லட்சுமணன், திரு. பழனி கிருஷ்ணன் ஆகியோர்.

நிறைவு நாளன்று தென்னவர் திரு. கோ. ப. இலக்குமணன் வாழ்த்துரை வழங்கினர்கள். திரு. கு. சுப்பிரமணியம் தலைமை தாங்கினர். பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப் பட்டது.

கடிதம்:

மருதமலை,
திரு அருணகிரிநாதர் அருள்நெறி கிருத்திகைக் கழகம்

செயலகம்: இராமநாதபுரம்
'சிவராம மணிவாசகர் இல்லம்' கோவை — 631 045
8/64, கணேசபுரம் 3—6—85

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களின் பொன்னார்திருவடிகளைப் போற்றி வணக்கம் செய்து மிகப் பணிவன்டன் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

தவப்பெருந்தகையீர்! அம்மையப்பர் திருவருள் துணைக் கொண்டு பேரூர் ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்கராமசாமி அடிகள் (எங்கள் கழகத்தின் செயற்குழுவின் ஆலோசகர்) அவர்கள் தலைமையில் எங்கள் கழக அன்பர்கள் தாய்மார்கள் ஆக ஐம்பதுபேர்கள் சென்ற 15—5—85 முதல் 21—5—85 முடிய மேற்கொண்ட சிவத்தலப் புனிதயாத்திரையில் (நமது சைவ சமயக்குரவர் நால்வர் பெருமக்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி மேற்கொண்ட திருத்தலப் பயணமாகும்.) 18—5—85ல் தங்கள் திருமடம் வந்து தேவரீரிடம் நல்லாசியுடன் திருநீறும் பெற்று அணிந்து தாகசாந்தியும் செய்துகொண்டு தொடர்ந்த திருத்தலப் பயணத்தில் தங்களின் அருளாட்சியில் நடைபெற்று வருவதான வைத்தீசுவரன்கோயில், திருபுவனம், திருக்குறுக்கை (வீரட்டம்), திருக்கருப்பறியலூர், திருக்கற்குடி முதலிய பதிகளும் மேலும் 41 பதிகளுக்குமசென்று அந்தத்தலங்களுக்குரிய மூவர் தேவாரத் திருப்பதிகங்களை ஓதி வழிபாடுசெய்துகொண்டு தேவரீரது அருளாசியால் நலமுடன் 21—5—85 ல் கோவையில் அவரவர் இல்லம் வந்து சேர்ந்தோம்.

தங்கள் அருளாட்சியில் நடைபெற்றுவரும் மேற்கண்ட திருத்தலங்கள் போற்றுதலுக்குரியவண்ணம் மிகமிகத் தூய்மையாக உள்ளன. அங்குப்பணிபுரியும் அர்ச்சகர் முதலானோர்கள் தங்களது கடமைகளைச் செவ்வனே செய்துவருகின்றார்கள். இதனால் வழிபடச் செல்வோர்களுக்குத் திருவருளின்பம் நன்கு கிட்டுகின்றது. திருக்கோயில்களில் அருள் விளக்கப்பொலிவு மிளிர்கின்றது.

தங்களது தெய்வீகப் பணியைப் போற்றி எங்களது மிக ஆழ்ந்த நன்றியுடன்கூடிய வணக்கத்தைத் தவத்திரு. பேரூர் அடிகள் சார்பிலும் திருத்தலவழிபாட்டுக் குழுவின் சார்பிலும் கழகத்தின் சார்பிலும் மிகமிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

கழகத் தொண்டன்,

ஆ. அருணாசலம், செயலாளர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(குரோதனஹு ஆனிமீ 1வ முதல் 31வ முடிய)

(15—6—1985 முதல் 15—7—1985 முடிய)

குரோதனஹு வைகாசிமீ 32வ சுக்கிரவாரம் பரணி நக்ஷத்திரம் தைதலை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 49 நாழிகை 50 விநாடிக்கு மீன லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசி சங்கிரமணமாக ஆனிமாதப் பிரவேசம் செய்தளுகின்றார். மறுதினம் ஸ்திரவாரம் ஸ்ரீ சூரிய பகவான் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசித்து மேகாதிபதி அர்க்காதிபதி சனிபகவான் ஆகிறார். அதனால் உலகெங்கும் கரிசல் பூமி செழிக்கும். உளுந்து எள் எண்ணெய் வித்துகள் விருத்தியாகும். தூக்குத்தூக்காக மழை பெய்யும். சிவஸ்தலங் களில் லோக சுபிட்சார்த்தமாக ஹோம யக்ஞங்கள் வருண ஜெபம் செய்வதினின்றும் சர்வேஸ்வரனருளில் மழை பெய்து எல்லா பூமிகளும் செழிக்கும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். மரகத மாணிக்கக்கல் ஆபரண பிராப்தி யை அளிக்கும். பூமியில் அபிவிருத்தி ஏற்படும். ஜூன் 24 தேதிக்குமேல் பத்திரம் தஸ்தாவேஜுகளில் நல்லன ஏற்படும். அரசாங்கத்திலிருந்து நல்லசெய்தி வரும். நவீன வாகனம் வாங் குதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 8, 9 தேதியில் சுபகாரியச் செலவு ஏற்படும். ஜூன் 29, 0 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாகவரும். கௌரவம் தர்மங்களில் நல்லவித செலவுகளையும் ஏற்படுத்தும். சகோதரருக்கு மேலிடத்திய நன் மதிப்பு தரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நன்மை ஏற்பட்டுக்கொண்டிருக்கும். எல்லாக் காரியங்களும் முன் ஆலோசனையில் நல்லவிதமாக நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜுலை 2, 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தன லாபங்கள் வெகுவாக வந்துகொண்டிருக்கும். சகோதரர் பந்து மித்திரர்களின் அனுசரணைபலன் தரும். இயந்திர வாகனம் தரும். ஜுன் 23 முதல் வித்தியா வியாபாரங்களில் நற்பலன்வரும். தாம்பத்திய வாழ்வில் சுகமும் நிலவும். எல்லாக்காரியங்களும் கௌரவமாக நடக்கும். ஜுலை 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். நீர் இயந்திர சாதனம் வாங்குதல் ஆகும். தெய்வகைங்கர்யம் செய்தல் புனிதஸ்தலம் சென்றுவருதல் ஆகும். வித்தியா வியாபாராதிகளில் விளம்பரச் செலவினங்களும் முதலீடு செய்தலும் ஆகும். நல்ல வாகனம் தரும். எல்லாக்காரியங்களும் நல்லவிதத்தில் நடந்துகொண்டிருக்கும். ஜுலை 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் 3 விதத்தில் வரச்செய்யும். சகோதரர் பந்துமித்திரர்களின் நலனுக்குக்கௌரவத்தில் நல்கும். நவீன வாகனபிராப்தியையளிக்கும். தாரம் புத்திரர் பௌத்திரியர்களின் நலம் நன்றாக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் சிறப்பாக நடக்கும். ஜுன் 20, 21, 22 தேதிகளில் தர்மம்செய்ய சம்பவமாகும். ஜுலை 8, 9, 10தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுப பலன்தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத் துறைகளில் நல்ல வாய்ப்பு தரும். செய்தொழில் உத்தியோகம் இவற்றில் முன்னேற்றமும் மேற்பதவி ஏற்படுதலும் ஆகும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூலை 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானங்கள் கணிசமாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் சிறப்புதரும். உத்தியோகத்தில் பதவிஉயர்வு ஏற்படும். வாகனங்கள் சுகம் திருப்தியளிக்கும். ஜூன் 30 தேதி ஆனால் ஓர் திரண்டபொருள் கைக்குவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூன் 16, 17 ஜூலை 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாகநடக்கும். பணவரவுகள் முன்றுவகையில் வரச்செய்யும். பூமி இயந்திரங்களில் முதலீடு செய்யும். வீடுவாகனங்களில் நல்ல அனுபோகம் இருந்துவரும். எல்லாக்காரியங்களும் கெடியான தோரணைக்கு ஏற்ப விரைவில் நடக்கும். தாரபுத்திரர் பௌத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூன் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாகநடக்கும். நல்லபணவருமானம்வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் ஜூன் 23 தேதிக்குமேல் நல்லவாய்ப்புகளை உண்டுபண்ணும். எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்பட்டுவரும். நல்ல இயந்திரசாதனம் வாங்குதல் ஆகும். வீடுவாகன பிராப்தியில் நல்ல அனுபோகம் இருந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுப பலனை நடக்கும். பணவருமானம் சரளமாக வந்துகொண்டிருக்கும். கொடுக்கல்வாங்கல் லேவாதேவிகளில் நல்ல நிலைமையை உருவாக்கும். இயந்திரம் மோட்டார் வாகனங்களில் நல்ல அனுபோகபிராப்தியும் விருத்தியும் ஏற்படும். புத்திரிக்கு சுபமங்களம் ஏற்படும். சத்துருபங்கம் ஆகும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கும். ஜூன் 23, 24, தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். தெய்வ கைங்கர்யம் செய்தல் பொதுநல தர்மம் செய்தல் ஆகும். ஜூன் 23 தேதிக்கு மேல் வித்துவத்தில் பத்திர லிகிதங்களில் நற்பலனும் உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படுதலும் ஆகும். ஜூலையில் புதிய வாகனபிராப்தியை தரும். ஜூன் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பணவருமானம் கணிசமாகவரும். வெள்ளைக்கல்பதித்த பூஷணம் தரும். புனித க்ஷேத்திரம் சென்று வருதல் ஆகும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு நல்விஷய சம்பாஷணை மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். நெருங்கிய பந்து ஒருவர் தாமாக விலகி இருப்பர். தாரம் புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

★

அன்பு, கண்ணீர் வடிவிலே காட்சியளிக்கும்போது, மிகமிக அற்புதமானது. கண்ணீர்த் துளிகள், மென்மையான மேக நீர்போல் மனித உள்ளத்தில் இருக்கின்ற தெய்விக வித்தை இனிது வளர்க்கிறது - துளிர்க்கச்செய்கிறது.

— வால்டர் ஸ்காட்.

இதயம்பற்றி....

உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் இரத்தம் உணவுச் சத்தையும், ஆக்ஸிஜனையும் (உயிர்க்காற்று) எடுத்துச் செல்லவேண்டும். அங்கு உண்டாகும் கழிவுப்பொருள்களை ஏற்றுத் திரும்பவேண்டும். இங்ஙனம் இரத்தம் உடலினுள் எப்பொழுதும சுற்றிக்கொண்டே இருக்க வேண்டும். இரத்தம் திரவம். தானகச் சுற்ற இயலாது. ஆகவே அதனை இயக்குவிக்கும் பம்ப் (Pump) ஒன்றுவேண்டும். இதயம் அத்தகைய பம்பாக அமைந்துள்ளது.

★

உடலினுள் ஏறத்தாழ 1¼ காலன் இரத்தம் உள்ளது. சுமார் 10,000 மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள் உள்ளன. இவற்றின்மூலம் இரத்தத்தை இதயம் அனுப்பி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இதற்கு ஏற்ற அழுத்தத்தையும் கொடுக்கவேண்டும். இதயம் இப்பொறுப்பை நிறைவேற்றுகிறது.

★

இதய அறைகள் சாதாரண நிலையில் நிமிஷத்துக்குச் சுமார் 72 தடவைகள் சுருங்கி விரிகின்றன. இச்சுருங்கி – விரிதல்கள் இதயத்துடிப்புக்கள் எனப்படும்.

ஆதாரம் : மனித உடலின் விந்தைகள் (லிப்கோ பதிப்பு)

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி
பாடம் – 5.

சைவ சமயப் பிரிவுகள்

" முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே "

என்று பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் சிவபெருமான் விளங்கும் சிறப்பினைக் கூறுகிறார் மாணிக்கவாசகர். இச்சிறப்பினைப் பெற்ற சிவனைப் பரம்பொருளாகக் கொண்டு வணங்கும் சமயமே ' சைவம் '.

கடவுளும் அவனுடைய அருளும் என்றும் மாறு இயல்பு உடையன. ஆனாலும் இறையோடு கலந்த சமய வாழ்வில், காலத்துக்குக் காலம், இடத்திற்கு இடம், புதிய புதியநெறிகளும், தொண்டு வகைகளும் காணப்படும். ஆகவே தான் சிவனோடு தொடர்புள்ள சைவ சமயத்திலும் பல விதங்கள். பல கூறுகள்.

பொதுவாக, சைவசித்தாந்தம், மற்றசமயங்களைப் புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் என்று பிரிக்கும். இந்தியாவின் பல இடங்களில், பல்வேறு காலங்களில், வழிபாட்டு முறைகளில் மாறுபட்டுத் தோற்றம் அளித்த சைவ சமயக் கூறுகள் பல. பழம் நூல்களிலிருந்து நமக்குப் பெயர்கள் தெரியவரும் அகப்புறச் சமயங்களாவன: 1. காஷ்மீர சைவம் 2. வீர சைவம், 3. ஸ்ரீகண்டரின் சிவாத்வைதம், 4. பாசுபதம் (மகாபாசுபதம்), 5. காபாலிகம், 6. காளாமுகம், 7. பைரவம், 8. மாகேசுரம், 9. சிவ பாகவதம், 10. மகாவிரதம், (மகா சைவம்) 11. காலானனம், 12. பூர்வ சைவம், 13. சிவசம வாதம், 14. சிவசங்கராந்தவாதம், 15. காணபதம், 16. கரலிங்கம், 17. சுத்தசைவம், 18. அணுசைவம், 19. அவாந்தர சைவம்,

20. காருணிக சித்தாந்தம், 21. காருக சித்தாந்தம், 22. காதக சித்தாந்தம், 23. பிராவார சைவம், 24. அந்தியசைவம், 25. நையாயிகம், 26. வைசேடிகம், இவை அனைத்தும் சைவசமயத்தின் தனித்தனிக் கூறுகளைத்தான் சுட்டுகின்றனவா அல்லது ஒரு பிரிவே இரண்டு மூன்று பெயர்களால் அழைக்கப்பட்டனவா என்பன போன்ற கேள்விகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் இன்னும் முடிந்த முடிபாக எதையும் கூறவில்லை.

காஷ்மீர சைவம் :

நேபால், காஷ்மீரம் போன்ற இடங்களில், ஒன்பதாம் நூற்றாண்டில் சைவம் மிளிர்ந்திருந்தது. வசுகுப்தர் நிறுவிய ஸ்பந்தசாஸ்திரமும், 10-ம் நூற்றாண்டில் அபிநவகுப்தர் நிறுவிய ப்ரத்யபிஞ்ஞா சாஸ்திரமும் இணைந்ததே காஷ்மீரசைவம். இது 'த்ரிக' எனப்படும். சிவசமவாதிகள் என்பதும் இவர்களைக் குறிக்கும். இதையே ஈசுவராத்வயம் என்றும் கூறுவர்.

'சித்' என்பதே பரம்பொருள். அதுவே 'இதம்' என்ற பிரபஞ்சமாகித் தோன்றுகிறது. காஷ்மீர சைவத்தில் சக்திக்கு முக்கியத்துவம் உண்டு. பரம்பொருளினின்றும் சக்தியைப் பிரித்துக் காணவியலாது. பரம்பொருளுக்கு ஐந்து சக்திகள் கூறப்பட்டுள்ளன. அவை 1. சித்சக்தி, 2. சுவாதந்திரியசக்தி, 3. இச்சா சக்தி, 4. ஞானசக்தி, 5. கிரியா சக்தி என்பன. இவை முறையே சிவன், சக்தி, சதாசிவம், ஈசுவரன், சுத்த வித்தை ஆகியவற்றோடு தொடர்புடையவை.

சைவ சித்தாந்தத்தில் பேசப்படும் மும்மலங்களும் இங்கும் பேசப்படுகின்றன. காஷ்மீர சைவத்தின்படி ஆணவத்தால் கட்டுண்ட சைதன்யம் 'அணு' எனப்படுகிறது. இது அளவைக் குறிப்பதாகாது என்று தோன்றுகிறது. சிற்றறிவையும் சிறு ஆற்றலையும் பெற்று இருப்பதையே இது குறிக்கும்.

வீர சைவம் :

வர்ணாசிரம தர்மம் என்ற அடிப்படையில் மிளிர்ந்த ஜாதி வேற்றுமைகள் ஒருகுறிப்பிட்ட இனத்தாரைத்தீண்டத்தகாதவர் என வெறுத்தல் போன்ற நிகழ்ச்சிகளைத்தான் எதிர்த்தனர் வீர சைவர். சிவனை வீரக்கடவுளாக உணர்ந்தனர். சிவனுக்கே 'வீர'

என்ற அடைமொழியும் உண்டு. வீரம் இருவகைப்படும். படைக்கலங்களான அம்பு, வாள், வேல் போன்றவற்றைத் துணையாகக் கொண்டு போர் செய்வது ஒருவகை. படைக்கலங் களைத் தொடாமல் தன்னுடைய வலிமை கொண்டே போர் செய்வது இரண்டாவது வகை. சிவன் வேறு படைக்கலம் எதையும் எடுக்காமல் செய்து காட்டிய வீரச்செயல்கள் எட்டு. திருமூலர் இதையே 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய வீரச்சிவனை வழிபடு பொரு ளாகக்கொண்ட சமயம் வீர சைவம்.

பாசுபதம் :

தற்போதுகிடைத்துள்ள ஆதாரங்களின்படி, பாசுபதந்தான் சிவவழிபாட்டிலே பழமையானது. கி. மு. 2 – ஆம் நூற்றாண் டளவிலே பாசுபதம் சமைந்தது ஆகலாம் என்று கருதுகிறார் பண்டார்க்கர். பதஞ்சலி பகரும் சிவபாகவதருடன் பாசுபதரை இனங்கண்டால் அவர் கூறும் காலவரையறை சரியானதே.

இந்தக்கால எல்லையிலே கூர்ஜரத்தைச் சேர்ந்த காயாவரோ கணத்திலே (கத்யவார் – கார்வான்) தோன்றிய நகுலீசர், பழமையான பாசுபத சமயத்தைச் சீர்திருத்தி அமைத்தார்என்று தெரிகிறது. சித்தர்தேசமான அக்காயாவரோகண மயானத்திலே மகேசுரன் ஒரு பிரேதத்திலே ஆவிர்ப்பவித்து. நகுலன் அல்லது நகுலீசன் என்ற நாமத்தாலே கௌசிகன், கார்க்கியன், கௌரு ஷியன், மைத்ரேயன் என்ற நால்வர்க்கு மகேசுர யோகத்தை உபதேசித்தார் என்பது மரபுரை.

பாசுபதரது விதி – ஆசாரம் – வழி தனித்தன்மை வாய்ந்தது. முட போதுப சாம்பலிலே முழ்கல். ஆஹா ஆஹா என்று தண்ட னிட்டுக்கொண்டே கோயிலை வலம் வருதல் – இவை போல் வனவே பாசுபதர் விதி - வழி ஆகும்.

தமிழகத்திலே பாசுபதத்தின் வளர்ப்புப் பண்ணை, கச்சி, குடந்தை, நாகைக் காரோணங்களே என்று கருதலாம். தமது அவதாரத் தலமான சீர்காழியை, 'சைவர் பாசுபதர் வணங்கும் சணபை நகர்' என்பர் சம்பந்தர். மயிலாப்பூரிலே காபாலிகர்

வாழ்ந்திருந்ததையும் மாவிரதிகள் என்று காளாமுகரையும் அவர் குறிப்பிடுவார். விரிசடை விரதிகள் (காளாமுகர்) அந்தணர் சைவர், பாசுபதர் காபாலிகரைத் திருவாரூர்த் தெருவிலே இனங் காட்டுவர் அப்பர். மகேந்திரப் பல்லவனும் (கி. பி. 7 ஆம் நூற்றாண்டு) தலைநகரான காஞ்சியிலே வசித்திருந்த காபாலிகர் பாசுபதரைத் தமது மத்த விலாசப் பிரகசனத்திலே கடுமையாகப் பரிகசித்திருக்கிறான்.

கோவையைச்சார்ந்த பேரூரிலே மாரியம்மன் கோயில் பக்கம் தென்னந்தோப்பிலே சிற்பங்கள் சில கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று, மணற்கல்லால் ஆன இருகரம் உடைய லகுலீசர் சிற்பம். சம்மணமிட்டு அமர்ந்தகோலத்திலே வலது கையிலே கமண்டலம் போன்ற பாத்திரம்; இடது கையிலே உள்ள தண்டு தோள்மீது சாய்ந்துகிடக்கிறது. ஜடாபாரம், காதளாவி யிருக்கிறது. வஸ்திரயக்ஞோபவீதம் கண்டாபரணம் காதிலே குண்டலம் உடைய அச்சிற்பம் கங்கவேந்தர்படைப்பு (கி. பி. 5-ம் நூற்றாண்டு) பேரூரில் தான் மாதவர்மன் கங்கரசை முதன்முதலில் தோற்றுவித்தது இங்கே கவனத்திற்குரியது. மகாபலிபுரம் தர்மராஜரதம், மதுரைப் பக்கம் அரிட்டாபட்டி புதுக் கோட்டை – தேவர்மலை – இவ்விடங்களிலே இருகை லகுலீசரைக்காணலாம். இவை கி. பி. 7, 8ம் நூற்றாண்டுக்கு உரியவை.

ஸ்ரீகண்டரின் சிவாத்வைதம் :

ஸ்ரீகண்டருடைய சைவ தத்துவ நெறி யாது என்பதைச் சுருக்கமாகக் காணலாம். ஸ்ரீகண்டர் 10ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக இருத்தல்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இவர் இராமாநுஜரைப்போலவே இறை, உயிர், உலகம் என்னும் முப்பொருள் உண்மைக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறார். ஸ்ரீகண்டரும், இறைவன் நிர்க்குணன் என்ற அத்வைதக் கொள்கையினின்றும் மாறுபடுகிறார். ஸ்ரீசங்கரருடைய 'உலகம் பொய்' என்ற கருத்தும் இவருக்கு உடன்பாடு அன்று. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது என்று கூறுகிறார்.

பதஞ்சலியார் 'சிவபாகவதர்கள்' என்ற ஒரு சைவ சமயக் கூறுபற்றி விவரிக்கின்றார். சங்கரரும் மாஹேஸ்வரர்களைக்

பற்றிக் குறிப்பிடுகிருர். வாசஸ்பதிமிச்ரா, சைவம், பாசுபதம், காபாலிகம், காருணிக சித்தாந்தம் என நால்வகைச் சைவ சமயங்களைப் பற்றிக் கூறுகிருர். பாஸ்கரர் காடக சித்தாந்தம் என்ற ஒன்றைக் குறிப்பிடுகிருர். இது காருணிக சித்தாந்தத்தினின்றும் வேறுபட்டதா அல்லது அதற்கு வழங்கப்பட்ட மறுபெயரா என்பது இன்னும் ஊன்றிக் கவனிக்கவேண்டும். காதக சித்தாந்தம் என்றும் ஒன்று வழங்கப்படுகிறது. இம் மூன்றும் ஒரே சைவ சமயத்தை விளக்கும் பல பெயர்களாக இருந்திருக்கலாம், அப்படியே வெவ்வேறு கூறுகளாக இருந்திருந்தாலும் அவற்றிற்கிடையே வேற்றுமைகள் மிகச் சிலவாக இருந்திருக்கவேண்டும்.

பைரவம் :

பைரவர்கள் என்பவர்கள், சுடுகாட்டில் கூடி இறந்துபட்ட உடல்மீது உட்கார்ந்து இரவில் பூஜை செய்வர். தீய சக்திகளுக்கு எதிராக அவைகளை அழிக்கும்பொருட்டு சக்திபெற வேண்டி, தந்திரம் மந்திரம் முதலிய வழிபாட்டு முறைகளை மேற்கொள்வர். தங்கள் உடல்களில் கன்னம் நாக்கு போன்ற மென்மையான சதைகளில்கூட எதையாவது குத்திக்கொள்வர். இவையெல்லாம் ஒருவேளை அவர்களுடைய தூய்மையைப் பறைசாற்ற எண்ணிச்செய்த தீவிரச் செயல்களாக இருக்கும் என எண்ணத்தோன்றுகிறது.

காளாமுகம் :

பி. எல். ரைஸ் என்னும் மேல்நாட்டுப் பேரறிஞர் காளாமுகர்களுக்குச் சொந்தமான தாமிரபட்டயங்களைப் பதிப்பித்தும் மொழிபெயர்த்தும் உள்ளார். கர்நாடகாவில் 11, 12, 13 ஆம் நூற்றுண்டுகளில் காளாமுகர்கள் சிறப்பாகக் கருதப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இவர்களுக்கும் இவர்களுடைய கோயில்களுக்கும் பெருமளவில் மான்யங்கள் வழங்கப்பட்டதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. இவர்கள் காஷ்மீரத்தில் இருந்து வந்திருக்கக்கூடும் என்று ஏ. வி. சுப்பையா அவர்கள் அறிவித்துக் கூறுகிருர். அதற்குரிய காரணம், ஆதரவுக்குறைவு, பஞ்சம், அரசியல்பாதிப்பு, நாட்டில் அமைதி

யின்மைபோன்ற எதுவாகவேண்டுமானாலும் இருந்திருக்கலாம். காளாமுகர்களுக்குச் சொந்தமான தாமிரப் பட்டயங்கள், சிமோகா, பெல்காம், பெல்லாரி, பீஜப்பூர், தார்வார், சிக்மகளூர், ஹலிகேடு, கோலார், தும்கூர் ஆகிய எல்லா இடங்களிலும் கிடைக்கப்பெற்றுள்ளன. ராயராஜகுரு, சுரேஷ்வர தேவர் போன்றவர்கள்பற்றிய குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன.

காபாலிகம் :

11ம் நூற்றுண்டுமுதல் 13ம் நூற்றுண்டுவரை காபாலிகர்கள் தென்னிந்தியாவில் அதிலும் முக்கியமாக மைசூர் மாகாணத்தில் நன்கு வேரூன்றியிருந்தார்கள். இவர்கள் விபூதியை உடல் முழுவதும் பூசி, கபாலத்தை மார்பில் அணிந்தோ அல்லது கரத்தில் ஏந்தியோ, அந்த மண்டை ஓட்டில் உணவு ஏந்தி உண்ணும் பழக்கமோ உடையவர்கள்.

மகாவிரதம் :

சாளுக்கிய மன்னன் நாகவரதன் அளித்த தாமிரப்பட்டயம் ஒன்று நமக்கு கிடைத்துள்ளது. அதில் ‘ கபாலீசுவரர் ’ என்ற கோவிலில் இறைவனுடைய வழிபாடுகளுக்கும், அங்கேயே தங்கியிருக்கும் மஹாவிரத வேதியர்களுக்கும் மானயம் அளித்த தாகக் கூறுகிறுர். Lorenzen N. David என்பவர் “ Kapalikas & Kalamukhas ” என்ற ஒரு ஆராய்ச்சி நூலை எழுதியுள்ளார். அதில் அவர் கூறுகிறுர்:- “ Several inscriptions from various other parts of India mention Kapales'varar temples but none of these are said to contain Mahavratins ”. அதாவது, கபாலீசுவரர் என்ற பெயருடன் விளங்கும் மற்ற எந்தக் கோவிலிலும் மஹாவிரதவேதியர் என்பவர்கள் தங்கியிருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இல்லை என்று கூறுகிறுர். ஆனால், மகிமை மிகும் மயிலையில் அமர்ந்து நம் மனதையெல்லாம் மகிழச் செய்யும் கபாலீசுவரர் கோவிலில்கூட 500 க்கு மேற்பட்ட மஹாவிரத வேதியர்கள் தங்கி இருந்தார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் "திருமயிலை உலா" என்னும் அரிய நூலை 1982 இல் வெளியிட்டுள்ளது. அதைப் பதிப்பித்தவர் திரு. மு. கோ இராமன் அவர்கள். நூலின் ஆசிரியர் பெயர் கிடைக்கவில்லை. அந்நூலில் ஆனித்திருவிழாக் கோலம் பற்றிய விவரம் கூறும்போது ஒரு செய்தி நமக்குக் கிடைக்கிறது.

" ....பெரியவனும்
போற்றும் திருவாசகம் புகன்ற புண்ணியனும்
ஆற்றவரும் பொன் கேடகத்தில்வர — சேல்பழனத்து
ஒற்றியூர்ச் சங்கிலிதோட்கு உற்ற மணவாளன்
வெற்றிமத வெள்ளானை மேல்போத — நல்தவத்து
முற்றபெருமான் அடியை முன்னும் நண்பன்தண்டீசன்
சாற்றும் திருவாடு தண்டில்வர — வாய்த்தபுகழ்ச்
செம்பியரும் மீனவரும் சேரவரும் காடவரும்
வெம்புரவி மீதில் விளங்கிவர — அம்புவியில்
ஆலாலம் உண்டோனை அர்ச்சிக்கும் ஐந்நூற்று
மேலாம் மகாவிரத வேதியரும் — நாலுஆய
தெய்வச்சுருதி தெரிந்து ஓதும் அந்தணரும்........"

உலாவந்ததாக ஆசிரியர் கூறியுள்ளது நோக்கற்பாலது.

வினாக்கள்

1. பழம் நூல்களிலிருந்து தெரியவரும் அகப்புறச் சமயங்கள் யாவை?

2. பாசுபதரைப்பற்றி எவ்வெவ் ஆசிரியர்கள் குறித்துள்ளனர்? விளக்குக.

3. ஸ்ரீகண்டரின் சிவாத்வைதம் பற்றிய கருத்துக்களை வரைக.

4. காளாமுகரைப்பற்றி விளக்கி அவர்களுக்குச் சொந்தமான தாமிரப் பட்டயங்கள் எங்கெங்குக் கிடைத்துள்ளன என்பதையும் எழுதுக.

5. குறிப்பு வரைக :–

(அ) காஷ்மீரச்சைவம். (ஆ) வீரசைவம்.
(இ) காபாலிகம். (ஈ) பைரவம்

கட்டுரை வழங்கியவர்கள் :–

டாக்டர் கு. விமலா,

திரு. கு. அருணாசலக் கவுண்டர்.